டிசம்பர் 2024

# தீபகச் சுடர்

தீபம் 13 சுடர் 07

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



## நம்பிக்கை நம்மை நிறைக்கட்டும்

# தீபகத்திலிருந்து இறையாசீர்



**அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,**

**கிறிஸ்து பிறப்பு பெருவிழா கொண்டாட்டமானது,** இருளை ஒளியால் அகற்றவும், சோர்ந்துபோன இதயங்களை நம்பிக்கைச் செய்தியால் புதுப்பிக்கவும் இப்பெருவிழா நம்மை அழைக்கின்றது. குறிப்பாக, **"நம்பிக்கை நம்மை நிறைக்கட்டும்"** என்கின்ற திருத்தந்தையின் அறைகூவல், வெறும் வார்த்தையல்ல, மாறாக **"நம்பிக்கை பிறக்காதா"** என்று ஏங்குகின்ற பல **"நம்பிக்கையின் திருப்பயணிகளுக்கு"** விடப்பட்ட ஒரு சிறந்த அழைப்பாகும்.

**தொழுவில் நம்பிக்கை:** கிறிஸ்து பிறப்பு விழா என்பது கடவுள் மனிதனாய் பிறந்து, மனித வரலாற்றில், மீட்பின் திட்டத்தில் தம் தந்தையின் திருவுளத்தை நிறைவு செய்துள்ளார். இத்திட்டம் ஆடம்பரமில்லாமல், எளிமையாய், அமைதியாய், பெத்லகேமில் மாட்டு தொழுவினில் குழந்தையாய், ஏழையாய், பிறந்து உலகமெங்கும் வாழும் **"நம்பிக்கையின் திருப்பயணிகளுக்கு"** நம்பிக்கையாய் பிறந்துள்ளார். இது ஒரு வரலாற்று நிகழ்வு மட்டுமல்ல, மாறாக இந்நிகழ்வு நம் வாழ்வில் நம்பிக்கையுடன் வாழ ஒவ்வொரு நாளும் நம்மை அழைக்கிறது. இந்த நம்பிக்கையை தினம் தினம் நாம் கண்டு பிடிக்கவும், அதை கொண்டாடவும், அதனால் நம்மில், பிரிவினை, மோதல், வெறுப்பு, பகைமை, சோர்வு, தீமை யாவும் ஒழித்து அன்புடனும், இரக்கத்துடனும், பரிவுடனும், மன்னிப்புடனும், ஒருவரையொருவர் ஏற்று வாழவும், திருத்தந்தை நம்மை அழைக்கின்றார். 'உன்னதத்திலே கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக, உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" (லூக். 2: 14) என்ற வானத்தூதர்களின் கீதம் இதே நம்பிக்கையுடன் கொண்டாட நம்மை அழைக்கின்றது.

**நம்பிக்கையின் திருப்பயணிகள்:** நம்பிக்கையின் திருப்பயணிகள் என்பது இன்பத்திலும், துன்பத்திலும், உடல் நலத்திலும், நோயிலும், **கடவுள் நம்மோடு இருக்கின்றார்** என்ற நம்பிக்கையோடு வாழ்க்கைப் பயணத்தை முன்னெடுத்து செல்வது. கடவுள் நம்மோடிருந்து, நம்மோடு செயலாற்றும்போது நமக்கு என்ன கவலை? நாம் யாருக்கு அஞ்ச வேண்டும்? 'அஞ்சாதீர்கள் இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்" (லூக். 2:10) என்ற வானத்தூதர்களின் அறிவிப்பு நமது நம்பிக்கையை பலப்படுத்தும். இடையர்கள் தங்களிடமிருந்ததை குழந்தைக்கு கொடுத்து வணங்கியதுபோல, நம்பிக்கையின் திருப்பணியாளர்களாகிய நாம், நம்பிக்கையோடு இல்லாதவரோடு பகிர்ந்து, பகிர்தலில் பெரும் மகிழ்ச்சி உண்டு என்பதை நம்பிக்கையோடு கொண்டாட நம்மை அழைக்கிறது.

**கிறிஸ்து பிறப்பு விழா** என்பது, நம் வாழ்வில் ஏற்படும் துன்பங்களிடையே, வருத்தங்களுக்கிடையே, தினம் தினம் நடக்கும் பல்வேறு குழப்பங்களுக்கிடையே நம்பிக்கையையும், எதிர்நோக்கையும் ஒவ்வொரு நாளும் புதுப்பிக்கின்ற சிறந்த விழாவாகும். கன்னிமரியாள், யோசேப்பு, இடையர்கள், மூன்று அரசர்கள் இவர்கள் யாவரும் பல துன்பங்களையும், தடைகளையும் சந்தித்து, குழந்தை இயேசுவை **கண்டனர், நம்பினர், வணங்கினர்.** இதனால் குழந்தை இயேசுவை சந்தித்தப்பின் அவர்கள் மகிழ்வுடன் புதுவாழ்வை துவங்கினார்கள். நாமும் குழந்தை இயேசுவைச் சந்தித்து, நம்பி, வணங்கி புதிய இறையாட்சியை கட்டியெழுப்புவோம்.

**"நம்பிக்கை நம்மை நிறைக்கட்டும்"** என்ற திருத்தந்தையின் அழைப்பு நம்மை கிறிஸ்துவில் வேரூன்றி வாழவும், கிறிஸ்துவ வாழ்வில் புது வளர்ச்சிக் காணவும், பிறருக்கு நம்பிக்கையாய் நாம் வாழவும், நமது பங்கில், நமது இல்லங்களில், நம் தனிப்பட்ட வாழ்வில் **அன்பு, உண்மை, நீதி, சமத்துவம்** என்ற இறையாட்சியின் விழுமியங்களை உலகில் ஒளிர்விக்கவும் நம்மை அழைக்கின்றது. நம்பிக்கை என்ற கொடையை, நம்பிக்கையின் தூதுவர்களாய், நம்பிக்கையை வளர்க்கும் பணியில், **"கடவுள் நம்மோடு இருக்கின்றார்"** என்ற மகிழ்ச்சியை உலகிற்கு பறைசாற்றுவோம்.

என்றும் அன்புடன்

அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச

இயக்குநர் - தீபகம்

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


01.12.2024 திருவருகைக் காலம் முதல் ஞாயிறு - திருப்பலி 02

03.12.2024 புனித பிரான்சிஸ் சவேரியார் - திருப்பலி 03

05.12.2024 அருளாளர் பிலிப்பு ரினால்டி - திருப்பலி 04

08.12.2024 திருவருகைக் காலம் 2ம் ஞாயிறு - திருப்பலி 06

09.12.2024 கன்னி மரியாவின் அமல உற்பவம் பெருவிழா - திருப்பலி 07

14.12.2024 சிலுவையின் புனித ஜான் அருள்பணியாளர் - திருப்பலி 09

15.12.2024 திருவருகைக் காலம் 3ம் ஞாயிறு - திருப்பலி 10

22.12.2024 திருவருகைக் காலம் 4ம் ஞாயிறு - திருப்பலி 12

25.12.2024 ஆண்டவருடைய பிறப்பு பெருவிழா - திருப்பலி 14

26.12.2024 தூய ஸ்தேவான் முதல் மறைச்சாட்சி - திருப்பலி 15

28.12.2019 புனித மாசில்லாக் குழந்தைகள் - திருப்பலி 17

29.12.2024 திருக்குடும்ப விழா - திருப்பலி 18

31.12.2024 இரவு திருவிழிப்பு நன்றி ஆராதனை - செபவழிபாடு 20


## பகுதி 2: நம்பிக்கையில் வளர...


அருளாளர் பிலிப்பு ரினால்டி 23

திருஅவைச் செய்திகள் 26

## பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 01.12.2024 திருவருகைக் காலம் முதல் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

I. எரே. 33: 14-16 II. 1தெச. 3: 12-4: 2 லூக். 21: 25-28, 34-36

கடவுள் நம்மோடு என்ற ஆழ்ந்த நம்பிக்கையில் வாழும் இறைச் சமூகமே, ஆண்டவர் இயேசுவின் திருவருகைக் காலம் முதல் ஞாயிறைச் சிறப்பிக்க நம்மை திருஅவை அழைக்கிறது. வாழ்வியல் பண்புகளில் எப்போதும் விழிப்பு என்பதே இயற்கையின் அருள். பேராற்றலின் இருப்பு நிலையாகவும், இயங்கு நிலையாகவும் உள்ளது. இயற்கைச் சீற்றம், கோரவிபத்து போன்றவைகள் மானிடருக்குக் கொடுக்கப்படும் எச்சரிக்கை அடையாளங்களாகும். மனம்போன போக்கில் வாழ்ந்துவிட்டு, வாழ்வின் இறுதி நேரத்தில் எல்லாவற்றையும் முறையாய் சீர்ப்படுத்தலாம் என்ற மனநிலை வளர்ச்சிக்குத் தடையாகும். எப்போதும் தயார் என்ற மனநிலையில் முயற்சியோடு செயல்பட வேண்டும். நீதி, நேர்மை, உள்ளத் தூய்மையென இன்றைய வாசகங்கள் பட்டியலிடும் நற்பண்புகளில் நிலைத்திருப்போம். இவை எங்கோ தொடங்கி, இங்கே, இப்படி என ஒரு முடிவுக்குட்பட்ட பண்பியல்புகள் அல்ல. மாறாக, அவை எப்போதும் தொடர்ந்து நீடித்தே மானிடத்தோடு பயணிக்க வேண்டியவையாகும்.

தொடக்கமும் முடிவும் இல்லாத பண்புக்கொண்ட இறைவனின் இயல்பே நற்பண்புகளின் இயல்பாகும். இதற்காகத்தான் "ஆண்டவரே நமது நீதி" என எரேமியா முழங்குகிறார். புனித பவுலடியாரின் அறிவுறுத்தலும் இதற்கு இணையானதே. இவற்றை ஒருங்கிணைத்து எப்போதும் விழிப்பாய் இருந்து மன்றாடும் வாழ்வியலைக் கற்றுத்தருகிறார் இயேசு. நேற்று தொடங்கி இன்றுமுடியும் தற்காலிகச் செயல்திட்டங்களை இயேசு ஒருபோதும் முன்னிலைப்படுத்த மாட்டார். அவர் என்றும் நிலைத்திருக்கும் மாண்பு கொண்ட வழிமுறைகளைத் தந்து மானிடர் அனைவரும் அவர்முன் வல்லவராய் வளர்ந்திட வேண்டுமென்பதையே தனி இலட்சியமாகக் கொண்டு வழிநடத்துகிறார். அவர் தொடங்கி வைத்து நமக்கு வழங்கிய வாழ்வியல் இறுதி என்பதே இல்லை. தொடக்கம்தான் இறுதியற்ற நிலைத்த தொடக்கமே திருவருகை. ஆகையால் நிகழப்போகும் அனைத்திலிருந்தும் தப்புவதற்கும் மானிட மகன் முன்னிலையில் நிற்க வல்லவராவதற்கும் எப்பொழுதும் விழிப்பாயிருந்து வாழ்வோம் உறுதியான உள்ளத்தோடு இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நம்பிக்கையின் நாயகரே எம் இறைவா, திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் இறைவேண்டல், இறைப்பணியில் நம்பிக்கையோடு நட்புறவுடன் செயலாற்றவும், தங்களை ஆழ்ந்த

இறைவல்லமைக்குட்படுத்தி உமக்கேற்ற வழியில் நாளும் நடந்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. வாழ்வளிக்கும் வள்ளலே எம் இறைவா, உம் மந்தையிலிருந்து வாழத் தெரியாமல் தவறானப் பாதையில் நாளும் நடந்து தங்களையே மாய்த்துக் கொண்டிருக்கும் இவர்களை உம் கருணையினால் மீட்டெடுத்து உமது வருகைக்காக தங்களையே தயார்ப்படுத்திக் கொள்ளும் மனப்பக்குவத்தை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. உலகையும், உம் மந்தையையும் மீட்கவரும் மீட்பரே எம் இறைவா, உலகில் வாழும் அனைத்து மக்களையும் எவ்விதப் பாகுபாடுகளும் இன்றி அனைவரின் நலனுக்காக நீர் வரவிருக்கின்றீர் என்பதை நாங்கள் உணர்ந்து உம்வருகையின் மதிப்பீடுகளின்படி வாழ்ந்து, புதுவாழ்வைக் காண வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. மருத்துவருக்கெல்லாம் மருத்துவரே எம் இறைவா, மனநோயினாலும், உடல்நோயினாலும், அவதிப்படுவோர், தனிமையில், சிறையில், யாருமற்ற நிலையில் தவிப்போர் அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். நீர் வரவிருக்கின்ற இந்நாட்களில் இவர்களையும் நீர் நினைவுக் கூர்ந்து, வாழ்வில் மகிழ்வினையும், விடுதலையும் அளித்து உம்மில் மகிழ்வினைச் சுவைத்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 03.12.2024 புனித பிரான்சிஸ் சவேரியார் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

இறை இயேசுவில் பிரியமானவர்களே, "கடவுளை அறியாத மக்கள் வசிக்கும் இடம் பூமியில் உள்ளது என்பதை நான் அறிந்தால் உணர்ந்தால் என்னால் அமைதியாய் இளைப்பாற முடியாது" என்று கூறிய புனித பிரான்சிஸ் சவேரியாரின் நாளை இன்று சிறப்பிக்கிறோம். இந்தியாவின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்ட நமது சவேரியார் 1506ல் உயர் செல்வந்தர் குடியில் பிறந்தவர். உலக போக்கின்படி வாழ்ந்த இவர் பாரிஸ் நகரில் கல்வி கற்க சென்றபோது அங்கு புனித இஞ்ஞாசியாரை சந்தித்து அவர் மூலம் முற்றிலும் மனம்மாறி அவரின் சீடரானார். பின்னர் குருப்பட்டம் பெற்று இயேசு சபையில் சேர்ந்து மறைப்பரப்பு பணிக்காக 1541ல் இந்தியாவின் கோவாவுக்கு வந்து தன் செபத்தாலும், உழைப்பாலும் கோவா மக்களை நெறிப்படுத்தி மனந்திருப்பினார். லட்சம் மைல்கள் வெறுங்காலுடன் நடந்து 100க்கும் மேற்பட்ட ஊர்கள் சென்று பல இலட்சம் மக்களை மனந்திருப்பி பின் சீனா செல்லும் வழியில் நோய்வாய்ப்பட்டு 21.12.1552ல் உயிர் துறந்தார். இயேசுவின்மீது கொண்ட அளவற்ற அன்பு அவரது உடலை இன்னும் அப்படியே பாதுகாத்து கோவாவின் பசிலிக்காவாகிய "பான் ஜேசு" ஆலயத்தில் வைத்துள்ளது. இன்றைய புனிதர் பிரான்சிஸ் சவேரியார் ஆண்டவரின் சேவைக்கு தன்னையே அர்ப்பணித்ததைப்போல நற்செய்தியை வாழ்வாக்க நாமும் நமது

சந்ததியினரை இறையழைத்தலுக்கு ஒப்புக்கொடுக்கும் நல்ல மனதையும், பிள்ளைகளின் எண்ணங்களையும் உமது பாதையில் நடக்கக் கூடிய ஆர்வத்தையும் இறைவனிடம் பெற்றுக்கொள்ள திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நல்லாயனாம் இறைவா, "யாரை அனுப்புவேன் எனக்காக யார் போவார்கள்" என கேட்ட உம் குரலுக்கு "இதோ நானிருக்கிறேன் அடியேனை அனுப்பும்" என்று மொழிந்த எசாயாவை போன்று திருஅவையின் தலைவர்கள் அனைவரும் உம்மீது தனியாத தாகம் கொண்டு மக்களின் ஈடேற்றத்திற்காக உழைக்கும் நல்ல இதயத்தை தரவேண்டுமென தூய பிரான்சிஸ் சவேரியார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
2. திருஅவையின் நாயகனே இறைவா, மனித பிறப்பில் மனித நேயத்தையும், திருமுழுக்கில் கிறிஸ்துவ நேயத்தையும், குருத்துவத்தில் பரிசுத்த ஆவியானவரின் நிலைப்பாட்டையும், திருமண அருட்சாதனத்தில் அர்ப்பண நேயத்தையும், மனித குலத்திற்கு வழங்கும் வழிகாட்டியாக திகழ தூய பிரான்சிஸ் சவேரியார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
3. நலமளிக்கும் இறைவா, பெயர் தெரியாத நோய்களால் நொந்து நிலைக் குலைந்து மருத்துவமனையில் வாடிக்கொண்டிருக்கும் நோயாளிகளை உம் பதம் ஒப்புவிக்கிறோம். நோய்களை போக்கவல்ல உம் கரத்தை அவர்கள்மேல் வைத்து நோய் நீங்கி நலம் பெற தூய பிரான்சிஸ் சவேரியார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 05.12.2024 அருளாளர் பிலிப்பு ரினால்டி திருப்பலி

**முன்னுரை** (சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்)

பிலிப்பு ரினால்டி 1856ம் ஆண்டு இத்தாலி நாட்டிலுள்ள லூயி மான்பெராத்தோ என்ற இடத்தில் பிறந்தார். தமது 21வது வயதில் புனித ஜான் போஸ்கோவின் அன்பினால் ஈர்க்கப்பட்டு சலேசிய சபையில் சேர்ந்தார். இவரது குருத்துவ அருட்பொழிவிற்குப் பிறகு, சலேசியச் சபையில் நவதுறவிகளை உருவாக்கும் பணி இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் 1889ம் ஆண்டு தொன் ரூவா, இவரை ஸ்பெயின் நாட்டிலுள்ள சாரியா என்ற இடத்திலுள்ள சலேசிய இல்லத்திற்கு இல்லத் தந்தையாக நியமித்தார். பிற்காலத்தில் இவர் அங்கு சலேசிய மாநிலத்தலைவராகப் பொறுப்பேற்று ஸ்பெயின் நாட்டில் சபையின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றினார்.

சலேசிய சபையின் துணைத்தலைவராக நியமிக்கப்பட்டு பொறுப்பேற்ற பின்னர் இவர் இறையழைத்தலைப் பேணுதல், உழைக்கும் இளம்பெண்களுக்கான ஆன்மீக சமூக உதவி மையங்களை நிறுவுதல், சலேசிய சகோதரிகளுக்கு அவர்கள் சபை வரலாற்றின் முக்கிய காலகட்டத்தில் வழிகாட்டுதல், ஆதரவு வழங்குதல் போன்ற பல

சாதனைகள் மூலம் தனது தந்தைக்குரிய பண்புகளையும், வளமிக்க முன்முயற்சிகளையும் வெளிப்படுத்தினார். இவருடைய ஆர்வம் சலேசிய உடனுழைப்பாளர்களுக்கு ஒரு பெரும் தூண்டு விசையாக அமைந்தது. இவர் உலக அளவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சலேசிய முன்னாள் மாணவர்கள் கூட்டமைப்பினை உருவாக்கினார். இவர் கிறிஸ்தவர்களின் சகாய அன்னையின் பக்த சபையுடன் நெருங்கி உழைத்து வந்த காரணத்தால், ஒரு புதிய உருவில் அமைந்த துறவற அர்ப்பண வாழ்வை தம்முடைய கருத்தில் தாங்கி அதன் விளைவாக இன்று செழித்தோங்கும் பொதுநிலையோருக்கான தொன்போஸ்கோவின் தன்னார்வத் தொண்டர் அமைப்பை ஏற்படுத்தினார்.

1922ம் ஆண்டு சலேசிய சபைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட தந்தை ரினால்டி, தந்தை தொன்போஸ்கோவின் எண்ணங்களை காலச்சூழலுக்கு ஏற்ற விதத்தில் செயல்படுத்த அனைத்து முன் முயற்சிகளையும் மேற்கொண்டார். தான் எப்போதும் சலேசிய உணர்வை அடைய விரும்பும் ஒரு மாணவனாகவும், ஆன்மீக வாழ்வில் ஆசானாகவும் விளங்கியதால், இறைவன்மேல் முழுமையான பற்றுறுதியும் கிறிஸ்தவர்களின் சகாய அன்னைமீது அளவு கடந்த நம்பிக்கையும் வளர்த்துக் கொள்ள சலேசியர்களைத் தூண்டி, அவர்களின் உள்ளார்ந்த ஆன்ம வாழ்விற்கு உயிரோட்டம் வழங்கினார். இவர் திருத்தந்தை பதினோராம் பத்திநாதரிடமிருந்து புனிதப்படுத்தும் பணிக்கான தனி சிறப்புரிமையைப் பெற்றார். மறைப்பணியாளர்கள் தாங்கள் செல்லும் இடத்தின் மொழி, பழக்க வழக்கங்கள் மற்றும் கலாச்சாரத்தினைக் கற்று, நற்செய்தி அறிவிப்புப் பணியில் ஆற்றல்மிக்கவர்களாகத் திகழும் வண்ணம், அவர்களை மிக இளமையிலேயே அனுப்பினார். தந்தை ரினால்டி 1931ம் ஆண்டு டிசம்பர் 5ம் நாள் விண்ணக வாழ்வை அடைந்தார். திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் இவரை 1990ம் ஆண்டு ஏப்ரல் 29ம் நாள் அருளாளர் நிலைக்கு உயர்த்தினார்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. கடவுளின் திருக்கூட்டமான திருச்சபை தன்னுடைய ஆழ்ந்த விசுவாசத்தினால் பலதரப்பட்ட முரண்பாடான அன்றாட வாழ்க்கைச் சூழல்களிலும், வரலாற்று நிகழ்வுகளிலும் உம்மைக் கண்டுணர்ந்து, ஏற்றுக்கொள்ள வேண்டுமென இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. திருச்சபையில் இன்று செழித்தோங்கும் துறவறக் குடும்பங்களின் தலைவர்கள் நற்செய்தியிலும் சபையை நிறுவியவரின் உள்ளுணர்விலும் அன்புறுதி கொண்டு, தங்களுடைய துறவற இல்லங்களை கிறிஸ்துவின் அன்பிற்கு ஏற்ற நிலையில், வாழும் அடையாளங்களாகவும், இறைமக்களை வரவேற்கும் அன்புத் தளங்களாகவும் அமைந்திட வேண்டுமென இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அருளாளர் பிலிப்பு ரினால்டியின் முன்மாதிரியைப் பின்பற்றி, இன்றைய சமுதாயத்திலும், திருச்சபையின் வாழ்விலும் மேலெழும் தேவைகளை நிறைவேற்றும் விதத்தில், சலேசிய சபை தன்னுடைய திருத்தூதுப்பணியின் முன்முயற்சிகளை மேன்மேலும் வளரச் செய்ய வேண்டுமென இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 08.12.2024 திருவருகைக் காலம் 2ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

I. பாரூக். 5: 1-9 II. பிலி. 1: 4-6, 8-11 லூக். 3: 1-6

இன்று திருவருகைக் கால 2ம் ஞாயிறை சிறப்பிக்க இணைந்து இருக்கும் அனைவரையும் இரு கரம் கூப்பி அன்புடன் வரவேற்கின்றேன். மனிதம் மனிதமாகவே வாழ வேண்டும். அப்போதுதான் வாழ்வு சிறக்கும். அப்படி வாழ பலது அதாவது உறவுகள், நிலம், நீர், காற்று, நெருப்பு, வெட்டவெளி அத்தியாவசிய, அடிப்படை வசதிகள் தேவைப்படுகிறது. ஆகையால் தான் இறைவன் முதலில் இவையனைத்தையும் உருவாக்கி நல்லது எனக் கண்டார். பின் மனிதத்தை உருவாக்கினார். ஆனால் மனிதமோ தன்னையும் சிதைத்து இயற்கையையும் சின்னாப்பின்னமாக்கி தனக்குத்தானே அடிமைச் சங்கிலியை பூட்டிக் கொண்டது. இந்த விலங்கினை உடைத்து விடுதலை கொடுத்து சீரற்றதை சீராக்கி நேர்மை படுத்தும் காலமே திருவருகைக் காலம். ஒட்டு மொத்த மனிதமும் தனது துன்ப துயர ஆடைகளை களைந்து மாட்சிமையின் ஆடையான மீட்பின் ஆடையை உடுத்த வேண்டும். நமக்கு உதவாத தேவையற்ற இயற்கையை அழித்து அதன் மூலம் நச்சுத்தன்மையை பரப்பி மனிதத்தை அழிக்கும் அனைத்தையும் ஒழித்து காக்க வேண்டும். இவையனைத்தையும் செய்து நாம் மகிழ்ச்சியுற வேண்டும் என்பதற்காக இறைவன் பரிவுள்ளத்தோடு தனது வாக்கையும் நீதியையும் நிலைநாட்ட இக்காலம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதற்காகவே அமல உற்பவியாக அன்னைமுன் குறிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டு அனைத்திலும் உடனிருந்தார். தொடக்க நாள் முதல் தெரிந்து கொள்ளப்பட்டு மீட்புத் திட்டத்தின் விடிவெள்ளியாக அன்னை திகழ்கின்றார். எசாயா திரு நூலிலும் காண்கிறோம். அன்னை மரி அருட் கொடைகளின் இருப்பிடம். ஏனெனில் நாம் எதிர்நோக்கும் அனைத்து நன்மைகளையும் அன்னையின் கரங்கள் வழியாகவே பெற்றுக் கொள்கிறோம்.என ஒரு செல்லசின் மடாதிபதி கூறியுள்ளார். நமது வாழ்வின் துன்பங்கள் சோதனைகள், வருத்தங்கள், ஏமாற்றங்கள், கவலைகள் பெருகும் போது அவரது உதவியை நாடி அவரின் திருப் பெயரை நாவும் உதடும் அசைய நீங்காது உச்சரித்து அவரைப் பின்பற்றி மீட்பின் பாதையில் பயணிப்போம். நம்பிக்கை இழக்காது சோர்வடையாமல், தீமைக்கு பயப்படாமல் விண்ணக வாழ்வை பெறுவோம் என புனித

அல்போன்ஸ் மரிய லிகோரி பதிவிட்டுள்ளார். உலகத்தில் உள்ள அனைத்தையும் நேராக்கி சீராக்கி நம்பிக்கை ஒளி ஏற்றி அனைவரையும் மகிழ்விப்போம். இணைந்து செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா எம் தாய் திரு அவையின் தலைவர்களான திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட் பணியாளர்கள், இருபால் துறவறத்தார்கள் உமது இறையாட்சி எனும் விதையை விதைத்து விளைச்சலை பெருக்கி மனிதத்திற்கும் இயற்கைக்கும் பயன்படும் வகையில் அனைத்தையும் செழித்து வளர உமது அருள்வரங்களைப் பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.
2. விடுதலை வழங்க வந்த வேந்தனே, உம்மை வரவேற்க காத்திருக்கும் நாங்கள் ஏற்றத்தாழ்வுகள், பிரிவுகள், பிணக்குகள் அன்பும் அறமும் இல்லா நிலைகளை அகற்றி தீமையெனும் ஆடைகளை களைந்து மேடு பள்ளங்களை சரி செய்து சமத்துவம் சகோதரத்துவம் எனும் ஆடைகளை உடுத்தி எங்கள் உள்ளங்கள் இல்லங்களில் வரவேற்று மகிழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. மாசின்றி மனிதமாக உதிக்க அமல அன்னையை தேர்ந்தவரே அன்னை அனைத்திலும் உம்மோடு உடனிருந்தது போல மக்கள் அனைவரும் எங்கும் என்றும் எப்போதும் உடனிருந்து இணைந்து உமது ஒளியை உலகிற்கு வீசச் செய்து மகிழ்ந்து மகிழ்விக்கும் வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
4. எளிமையே உருவான இறைவா, ஆடம்பரமான விளம்பரங்களை காட்டி மக்களை ஏமாற்றி பணம் பறிக்கும் மனித நேயமற்ற செயல்கள் ஒழிய வேண்டும். இந்நாளில் மக்களை ஏமாற்றி பணம், சொத்துக்களை பறித்துக்கொண்டு அலையவிடும் கொடுமைகள் நீங்கி அன்பு பெருகி அமைதி நிலைத்து மகிழ்ச்சி நிறைந்து சமாதானம் வழிந்தோட வேண்டும் என வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 09.12.2024 கன்னி மரியாவின் அமல உற்பவம் பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகு ட மன்னன்

I. தொ.நூ. 3: 9-15,20 II. எபே. 1: 3-6, 11-12 லூக். 1: 26-38

அன்புக்குரிய இறைமக்களே, திருஅவையானது உண்மையில் அமல உற்பவ விழாவைச் சிறப்பிக்கின்றது. 1854ம் ஆண்டு டிசம்பர் 8ம் நாள் திருஅவையின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட நாள். அன்று உரோமை, புனித இராயப்பர் பேராலயம் விழாக் கோலம் பூண்டிருந்தது. பேராலய வளாகத்தில் 50ஆயிரத்துக்கும் அதிகமான நம்பிக்கையாளர்கள் கூடியிருந்தனர். பின்னர் தமது "சொல்லற்கரிய கடவுள்" "Ineffablies Deus" என்று நம்பிக்கை சத்திய பிரகடணத்தை

வாசித்தார். திருத்தந்தையின் கணீரென்ற தெளிவான குரலொளி ஆலயப் பீடங்களில் தெரித்து, கூரையில் பிரதிபலித்து, வெளியே சதுக்க வளாகத்தில் எதிரொலித்தது. மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட கன்னி மாமரி மனுக்குலத்தை இரட்சிப்பவரான இயேசு கிறிஸ்துவின் பேறுபலன்களை முன்னிட்டு எல்லாம் வல்ல இறைவனுடைய தனிவரப்பிரசாதத்தால் "உற்பவத்தின் அந்த முதல் கணத்திலிருந்து ஜென்மப் பாவக்கறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள், காப்பாற்றப்பட்டார்கள்" இந்த சத்தியம் கடவுளால் வெளிப்படுத்தப்பட்டது. ஆதலால், கிறிஸ்தவர்கள் அனைவரும் உறுதியுடன் விசுவசித்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பிரகடண அறிக்கையின் வார்த்தைகளை உச்சரித்து தொடர்ந்து வாசித்தார். திருத்தந்தையின் வார்த்தைகள் உறுதியுடனும், அதிகாரத் தொனியில் வந்தாலும், உணர்ச்சிப் பெருக்கத்தால் தடுமாறி தேவதாயின் மீதான அன்பால் பக்தியால் தோய்ந்து ஒலித்தது. தொடக்கக் காலத்தில் கடவுளால் மூட்டப்பட்ட பகையினால் பாம்பின் தலையை நசுக்க வல்ல பெண்ணாக (தொ.நூ. 3:15) அமலோற்பவியாகப் பிரகடணப்படுத்தப்பட்டார்கள்.

மரியாவின் அமலோற்பவச் சத்திய பிரகடணம் செய்யப்பட்ட நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு 1858ம் ஆண்டு மார்ச் மாதம் 25ல் நாளன்று பிரான்ஸ் நாட்டில் பிரெனீஸ் மலைச்சாரலிலுள்ள லூர்து என்ற சிற்றூரில் மசபியேல் குகை கெபியில் சிறுமி பெர்னதெத்திற்கு காட்சியளித்த தேவதாய் தமது 16வது காட்சியில், "நாமே அமலோற்பவம்" என்ற தமது பெயரை வெளிப்படுத்தினார். அர்த்தம் தெரியாத சிறுமியின் வாயிலாகக் கேட்ட திருஅவை அதிகாரி பிரமித்துப்போனார்கள். வற்றாத நீர் சுனையால் அற்புதங்களும் புதுமைகளும் இன்றும் நிகழ்ந்துக் கொண்டிருக்கின்றன. சத்திய திருஅவையின் தவறாத வரத்துடன் பிரகடணப்படுத்தப்படும் உண்மைகள், நித்திய சத்தியங்கள், மெய்யானவைகள். அவற்றை விசுவசிக்கத் தடையில்லை என்பதை ஏற்று பக்தியுடன் திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. என்றென்றும் குருவாயிருக்கும் ஆண்டவராகிய இயேசுவே, பேதுருவின் வழித்தோன்றலாகிய திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர், வேதியர், பொதுநிலையினர் அனைவரும் உமது இறையரைசக் கட்டியெழுப்பும் பணியில் சாட்சிகளாக வாழத் தேவையான வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. தாயும் தந்தையுமான இறைவா, திருத்தந்தை பிரான்சிஸ் அமல அன்னையின் பல்வேறு உன்னத குணங்களை விளக்கி, அன்னையற்ற ஒரு சமுதாயம் இதயமற்றதாக கருணையற்றதாக மாறிவிடும் என்றும், மிகக் கடினமானச் சூழலிலும் தன் குழந்தைக்காக உயிரையும் தியாகம் செய்து காப்பாற்றும் தாயைப்போல இன்றைய தாய்க்குலமும்

தியாக வாழ்வு வாழத் தேவையான வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. விடுதலையின் நாயகனே இறைவா, இன்றைய சூழ்நிலையில் மக்களை ஆள்வதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மனிதநேயப் பண்பினை பிரதிபலித்து, நேர்மை, நீதி, தியாகம் போன்ற வழிகளில் எடுத்துக்காட்டாய் வாழத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா, சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட இளையோரைத்தேடி அவர்களை நல்வழியில் நடத்துவதிலும், ஆற்றுப்படுத்துவதிலும் அக்கறைக்கொண்டு அருள்பணியாற்றும் சமூக ஆர்வலர்கள் எளிமை, எண்ணத்தூய்மை, மனவலிமையுடன் வாழ்ந்துக் காட்டத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 14.12.2024 சிலுவையின் புனித ஜான் அருள்பணியாளர் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணி சம்பந்தன்

இறையேசுவின் இனிய மக்களே, ஸ்பெயின் நாட்டிலுள்ள போத்தி பரோஸ் என்னும் ஊரில் ஏழையான பெற்றோருக்கு 1542ம் ஆண்டு பிறந்தவர் புனித சிலுவை யோவான். கல்வியறிவு பெற வசதியில்லா நிலையில் நோயாளிகளுக்கு சேவை செய்யும் தொழிலை செய்தவர். பின்னர் கார்மேல் சபையில் சேர்ந்து பணியாற்றியபோது இவரின் திறமையைக் கண்டு வியந்து குருப்பட்டம் தரப்பட்டது. கடுமையான தவ வாழ்வை விரும்பிய இவர் வேறொரு சபையில் சேர நினைத்தபோது புனித அவிலா தெரசம்மாள் கார்மேல் சபையிலேயே தனக்கு உதவியாக இருந்து சபையை சீர்த்திருத்த வேண்டிக் கொண்டார். அதை ஏற்று சபைக்காக உழைத்து வந்தவர். ஒருமுறை கடுமையான நோயில் வருந்தியபோது கூட வசதியே இல்லாத ஒரு மடத்தை தேர்ந்தெடுத்து இயேசுவுக்காக வேதனைப்பட வேண்டி அங்கு சிலுவையை பிடித்துக் கொண்டே தன் உயிரை அமைதியாக துறந்தார். இன்றைய வாசகங்களில் இறைவன் "நானே ஆண்டவர். எல்லாவற்றையும் செய்ய வல்லவரும் விடுதலைத் தருபவரும் நானே" என்கிறார். அதையே நற்செய்தியிலும் எங்கே துன்பம் துடைக்கப்படுகிறதோ, எங்கே துக்கம் மகிழ்ச்சியாக மாறுகிறதோ, எங்கே துயரமும் தேவனைகளும் மரணமும் அழிக்கப்படுகிறதோ அங்கே இறையரசு உள்ளது என்றும், நமதாண்டவர் இயேசு இரட்சகனும் ஊழியனும் ஆவார் என்பதை உணர்த்தவே எல்லாவித பிணிகளையும் துன்பங்களையும் குணமாக்கினார் என்று கூறப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் தியானித்து இன்றைய புனிதரான தூய சிலுவை யோவான் செயல்பட்டதைப்போல் உலக வசதிகள், வாய்ப்புகள், சொகுசுகள் இவைகள்மேல் மிதமிஞ்சிய பற்றில்லாமல் தூய வாழ்வு வாழ இத்திருப்பலியில் வரம்வேண்டுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. ஆற்றலின் ஊற்றே இறைவா, உமது பணியைத் தொடர்ந்து நிறைவேற்றும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர், பொதுநிலையினர் அனைவரும் இறை சேவையில் வளர்ச்சியடைய சீரிய சிந்தனையுடனும், நல்ல மனதுடனும் ஒன்றித்து பணியாற்றும் ஆற்றலை வழங்கிட உம்மை மன்றாடுகிறோம்.
2. விடுதலை நாயகனே இறைவா, இன்றைய உலகின் தீய பழக்க வழக்கங்களினாலும் நவநாகரீக உணவு வகைகளினாலும் உம்மால் படைக்கப்பட்ட மனித உடல்நிலை சீர்குலைந்து, நலிந்து போகும் நிலைமாற்றி நீரே கோட்டையும் அரணுமாய் இருந்து பாதுகாப்பு அளிப்பீர் என்ற நம்பிக்கையுடன் உம்மை மன்றாடுகிறோம்.
3. உறுதி தரும் இறைவா, "பொதுநலனே தன் நலன்" என்னும் சிந்தனையிலிருந்து "சுயநலனே தன்நலன்" என்று மாறிக்கொண்டு வரும் இச்சமுதாயத்தில் பிறந்து வளர்ந்து தன்னிலை இழக்காமல் பிறர்நலன் கருதி சேவைபுரியும் மனநிலையை தரவும், தன் சிலுவையைத் தானே சுமந்த தூய சிலுவை யோவான் போல மனஉறுதியுடன் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 15.12.2024 திருவருகைக் காலம் 3ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. லதா சுரேஷ்

I. செப். 3: 14-17 II. பிலி. 4: 4-7 லூக். 3: 10-18

இறையேசுவின் பிரியமான சகோதர சகோதரிகளே, பறவைகள் விதைப்பதுமில்லை, அறுப்பதுமில்லை, அவற்றைப் பத்திரப்படுத்தி வைப்பதுமில்லை. ஆனால் மறந்துவிடாமல் அவற்றிற்கு உணவினை நம் ஆண்டவர் கொடுத்து, காத்து வருகின்றார். ஆனால் அவரது படைப்பின் உன்னதமான படைப்பை அவரது சாயலாக உள்ள நாம் மட்டும் பயம் என்ற போர்வைக்குள் நம்மை மறைத்துக் கொள்கிறோம். தவறுகள் செய்யும்போது இறைவனை விட்டு விலகுகின்றோம். நம் தொடக்கக்காலப் பெற்றோர் கீழ்ப்படியாமையால் தங்களை மறைத்துக் கொள்ள மரத்திற்குப் பின்னால் ஒளிந்து நின்றனர். இன்று நாமும் ஒவ்வொரு நாளும் பல்வேறு காரணங்களால் இறையன்பை புறக்கணித்து அவரிலிருந்து விலகி இறைவனின் கண்களுக்கு மறைவாக வாழ்கின்றோம். இறைவன் இவ்வுலகை படைக்கும்பொழுது எவ்வித அச்சமோ, கவலையோ கொள்ளாமல் தம் படைப்புகள் எவ்வாறு வாழ்வார்கள் என்று நமக்குத் தேவையாதையெல்லாம் படைத்து நம்மை அவற்றையெல்லாம் அனுபவித்து வாழ உருவாக்கினார்.

அவர் உருவாக்கிய அனைத்தும் நல்லதெனக் கண்டார். கிளைகள் தன் கொடியுடன் இணைந்திராவிட்டால் அதனால் தனித்து பலன்தர முடியாது. அதைப்போன்றே நாம் இறைவனோடு இணைந்திருந்தால்

மகிழ்ந்திருக்க முடியும். நம் தேவைகள் எதிர்ப்பார்ப்புகள் அனைத்தையும் நன்றியோடு கூடிய இறைவேண்டல் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். இறைவனோடுக் கொள்ளும் உறவு என்பது மனித உறவைப்போன்றதல்ல, அது என்றென்றும் மாறாதது. நாம் அவரைத் தேடும்பொழுது நம்மருகில் நிற்பார், நாம் வாழ்க்கையில் செய்யும் ஒவ்வொரு தவறுகளையும் நினைவில் கொள்ளாதவராய் நம்மை மீட்கின்றார், நம் கண்முன்னே நம் பகைவர்களை அப்புறப்படுத்தி பாதுகாத்து அரவணைக்கின்றார். என் மகனே, மகளே என்று அழைத்து தன் இன்னுயிரை அளித்து நம் பாவங்களுக்காக அவமானங்களையும் ஏற்று அவரது அன்பில் நம் ஒவ்வொருவருக்கும் புத்துயிர் அளிக்கின்றார். நாம் ஒவ்வொருவரும் நன்றியுள்ளம் கொண்டவர்களாக இறைவனோடு இணைய இத்திருப்பலியில் அவரில் இணைந்து இறையாசீர் பெற இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. ஒடுக்கப்பட்டோருக்கும் உரிமையிழந்தோருக்கும் வாழ்வளிக்க தேர்ந்தெடுத்த எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர், இருபால் துறவறத்தார் அனைவரும் இவ்வுலக பாவ வாழ்க்கையில் விழுந்துவிடாமல், இறைவேண்டல்களின் ஆணிவேராய் நின்று மக்களை உம்மிடம் அழைத்துவர வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. கருணைக் கடலே எம் இறைவா, நீர் படைத்த ஒவ்வொன்றும் எங்களின் நலனுக்காகவே படைத்தீர். ஆனால் இன்றைய அறிவியியல், விஞ்ஞான கண்டுப்பிடிப்புகளால் ஒவ்வொன்றாக அழிக்கப்பட்டு வருகின்றனர். உம்முடையக் கருணையினால் மீண்டுமாய் புதிய உலகமாய் மாற்றி மக்கள் அனைவரும் வாழ்வில் மகிழ்வுறத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. இயற்கையின் ஊற்றே எம் இறைவா, தற்போது மாறிவரும் பருவ மாற்றங்கள், இயற்கைச் சீற்றங்கள், பேரழிவுகளால் விவசாயம் பாதிக்கப்பட்டு மக்கள் பலவித இன்னல்களுக்கு ஆளாகின்றனர். இந்நிலையை மாற்றி பருவக்காலங்கள் மனிதனுக்கு பயன்தரும் வகையில் அமைத்து வாழ்வாதாரம் வளமுடன் செழித்திட அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. கருணையின் உருவே எம் இறைவா, எங்கள் குடும்பங்களில் பலவிதமான பிரச்சனைகளாலும், மனவேதனைகளாலும், பண கஷ்டங்களாலும் துன்புறுவோரை நீரே கண்ணோக்கும். நீர் பிறக்க இருக்கும் இந்நாளில் எங்கள் வாழ்வில் எல்லா குறைகளும் நீங்கி இல்லங்களிலும், உள்ளங்களிலும் நீரே வந்து பிறந்திட எங்கள் உள்ளங்களை நாங்கள் தூய்மையாக்கிக் கொண்டு உம்மை எதிர்கொள்ளும் மனதை எங்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 22.12.2024 திருவருகைக் காலம் 4ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. மாலா செபமாலை

I. மீக்கா 5: 2-5 II. எபி. 10: 5-10 லூக். 1: 39-45

இறையேசுவில் அன்பார்ந்த இறைச்சமூகமே, இன்றைய திருப்பலிக்கு உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். இன்று திருவருகைக்காலத்தின் நான்காம் ஞாயிற்றுக்கிழமையான இன்று "சந்திப்பு" திருவிழாவைக் கொண்டாடுகிறோம். இதுவெறும் இருவரின் சந்திப்பு மட்டுமல்ல, "யுகங்களின் சந்திப்பு", "விசுவாசத்தின் சந்திப்பு", பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டின் சந்திப்பு". இச்சந்திப்பு நான்கு வகையில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. இன்று மரியன்னை தன் சிற்றன்னை எலிசபெத்தை சந்திக்கின்றாள். இச்சந்திப்பு மகிழ்ச்சி, மரியன்னையின் சந்திப்பார். எலிசபெத்தம்மாவின் வயிற்றிலிருந்து குழந்தை மகிழ்ச்சியால் தூய ஆவியைப் பெற்றுக்கொள்கிறது. "தூய ஆவி" மரியன்னையின் சந்திப்பின் நிமித்தமாக எலிசபெத்தம்மாள் தூய ஆவியால் முற்றிலுமாக நிரப்பப்படுகிறார்.

உதவி: முதிர்ந்த வயதில் கருவுற்ற எலிசபெத்தம்மாவிற்கு அன்னை மரியாவின் சந்திப்பு பெரும் உதவியாக இருந்தது. இயேசு அன்னை மரியாவின் சந்திப்பால் உலக இரட்சகரின் பிரசன்னத்தை எலிசபெத்தம்மாள் உணரச் செய்து மகிழ்ச்சியூட்டினாள். இன்றும் என்றும் நம் வாழ்நாளில் சந்திக்கும் எண்ணற்ற மனிதர்களுக்கு மகிழ்ச்சியை தருகிறதா? பிறப்பிலேயே அதுவும் பூர்விக கத்தோலிக்கர் என்று மார்த்தட்டிக் கொள்ளும் நாம் அடுத்தவர்களை சந்திக்கும்போது மூவொரு இறைவனை பிரதிபலித்து, மகிழ்ச்சியூட்டுவோம். அன்பானவர்களை நம் சந்திப்பு மற்றவர்க்கு ஆன்மீகம் சார்ந்ததும், வாழ்வில் சார்ந்ததும், மாற்றங்கள் சந்திப்பாக மாறவேண்டும். மேலும் இன்று புனித பிரான்சிஸ் சவேரியார் கப்ரீனி என்பவரின் விழாவையும் சிறப்பிக்கின்றோம். இவர் இத்தாலியில் அகஸ்டீன், ஸ்டெல்லாகப்ரீனி தம்பதியருக்கு 13வது குழந்தையாக ஜீலை 15ம் நாள் 1850ம் ஆண்டு பிறந்தார். இவர் தாழ்ச்சிக்கும், தூய்மைக்கும் பெயர் போனவர். தனது 18வயதில் உயர்ந்த கல்வி பயிற்சிப்பெற்று ஏழை நோயாளிகளுக்குச் சேவைச் செய்து வந்தார். இவருக்கு 24 வயதானபோது ஓர் அகதிகளின் இல்லத்தை நடத்தும்படி பங்குத்தந்தை இவரை அழைத்ததிலிருந்து ஒரு புதிய சபை தொடங்கப்பட்டது. இவர் ஆளுமையிலும், திட்டமிடுதலிலும் திறமையானவர், விவேகமானவர். மக்களின் மனநிலையை எளிதில் அறியும் திறமைப் பெற்றிருந்தார்.

இவர் நிறுவிய நிறுவனங்கள் இறைநம்பிக்கையை பறை சாற்றுவனவாக அமைந்தன. இவர் 67 நிறுவனங்கள், பள்ளிக்கூடங்கள், அகதிகளின் விடுதிகள், மருத்துவமனைகளை நிர்வாகம் செய்தார். 1917ம் வருடம் டிசம்பர் 22ம் நாள் திடீரென அவரது இல்லத்தில் தமது 67வது வயதில் மரணமடைந்தார். 1933 அக்டோபர் 3ம் நாள்

தமது அழியா உடலையும் பல புதுமைகளையும் வைத்து இவருக்கு வணக்கம் செலுத்தியபின் நவம்பர் 13ம் நாள் 1938ல் அருளாளர் பட்டம் வழங்கினார். 12ம் பத்திநாதர் திருத்தந்தை அவர்களால் ஜூலை 7ம் நாள் 1946ல் புனிதராக அறிவிக்கப்பட்டார். இவர் இறைவன்மீது கொண்ட நம்பிக்கையால் தம்முடைய செயல்களால் இறைவனை பிரதிபலித்ததுபோல் நாமும் இவரைப்பின்பற்றி வாழ வரம் வேண்டுவோம். இன்றைய இரண்டு வாசகங்களும் உலக மீட்பரின் வருகையையும் அவர் வருகையால் ஏற்படும் ஆன்மீக மாற்றங்கள், விடுதலை உயர்ந்த மகிழ்ச்சியான வாழ்க்கையை இஸ்ரயேல் அடைவதாக கூறுகிறது. நம்மை சந்திக்க வரும் உலக மீட்பரின் அருளடையாளங்கள் விவிலிய வாசகமும் சந்திப்பின் மகிமையைக் கூறுகிறது. இவரின் வாழ்க்கையைப் பின்பற்றி நாமும் இறைவனுக்கேற்ற பாதையில் நம் வாழ்வை வழிநடத்த அருள்வேண்டி இத்தெய்வீக பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. மீட்பின் ஒளியாம் இறைவா, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் உமது வருகையை எல்லோருக்கும் பறைசாற்றவும், மக்களை உமக்கேற்ற பாதையில் வழிநடத்தவும், நாட்டிலும், பங்குகளிலும், இல்லங்களிலும் வரவேற்ற எங்களை ஆயத்தப்படுத்த வேண்டிய அருள்வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. ஒளியின் சுடர்முகமே இறைவா, வியாதி, வறுமை, வருத்தம் போன்றவைகளால் துன்பப்படுவோர், அனைவரும் உமது வருகையால் அவற்றிலிருந்து விடுதலைப்பெற வேண்டுமென்றும், உம்மையே முழுமையாக நம்பி வாழும் உம் அன்பர்களின் கனவுகளை நனவாக்கி வாழ்வில் மகிழ்வினை ஏற்படுத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. இம்மானுவேலரே, எம் மீட்பரே, எம் இளைஞர்கள், இளம் பெண்கள், சிறார்கள் உமது பிறப்பு விழாவை தூய உள்ளத்துடனும், மன மகிழ்வுடனும் கொண்டாட அருள்புரிய வேண்டுமென்றும், அவர்களின் வாழ்வில் உம்மை முழு உள்ளத்தோடு அன்பு செய்யவும், உம்வழியில் பயணிக்கவும், உமக்காக தங்களையே தியாக உள்ளத்தோடு அர்ப்பணிக்கும் பரந்த உள்ளம் கொண்டவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. எங்களைப் பாதுகாப்பவரே, அன்னை மரியாளைப்போன்று நாங்களும் அடுத்தவர் தேவைகளைப் புரிந்துக்கொண்டும், உணர்ந்தும் முழுமனதோடு உதவிக்கரம் கொடுத்து உம் மகிழ்வினை அவர்களின் வாழ்வில் கண்டுணரக் கூடிய பரந்த உள்ளத்தை எங்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 25.12.2024 ஆண்டவருடைய பிறப்பு பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. எசா. 52: 7-10 II. எபி. 1: 1-6 யோவா. 1: 1-18

இறையேசுவில் இனிய திருக்குலமே, கிறிஸ்துமஸ் என்பது இறைவன் நம்மைத் தேடிவந்த நாள். கிறிஸ்மஸ் இரவு மகிழ்ச்சியின் இரவு. இந்த மகிழ்ச்சியை வானதூதர்கள் இடையர்களுக்கு அறிவித்தனர். இந்த இரவு விடுதலையின் இரவு. உலக வரலாற்றில் கி.மு, கி.பி. என்று வரலாற்றை இரண்டாகப் பிரித்தவர் இயேசு. அவர் பிறந்தநாள் இன்று நம் பாவம் போக்க விண்ணகம் விட்டு மண்ணகம் வந்த விடியலைக் கொண்டாடவே இந்த இரவு வேளையில் ஒன்றுக் கூடியிருக்கின்றோம். ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார், ஓர் ஆண்மகவு நமக்குத்தரப்பட்டுள்ளார் என்ற கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி அறிவிப்பு எசாயா நூலில் அறிவிக்கப்படுகிறது. காரிருளில் நடந்துவந்த மக்களுக்கு, சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டிற்கு இயே என்னும் ஆதாவன் உதித்துள்ளார் என்ற மகிழ்ச்சியின் நற்செய்தியை நிறைவாக அனுபவிக்க முதல் வாசகம் நமக்கு எடுத்துரைக்கிறது.

இறைவாக்கினர் பலரால் முன்னறிவிக்கப்பட்ட இயேசுவின் பிறப்பை எதிர்நோக்கிக் காத்திருந்த அனைவரும் கடவுளின் மீட்பினைக் கண்டுக்கொள்ளும்படி இயேசு மனிதனாக மக்கள் மத்தியில் பிறந்துள்ளார். நம்மை பாவத்திலிருந்து மீட்டு நல்வழிக்கு அழைத்துச் செல்லவும் தமக்குரிய மக்களான நம்மைத் தூய்மைப்படுத்தவும் தெய்வம் மனிதனானது என்பதை இரண்டாம் வாசகம் எடுத்துரைக்கின்றது. இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார், குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத்தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள் என்ற மகிழ்ச்சியின் நற்செய்தியை வானதூதர்கள் இடையர்களுக்கு அறிவிக்கின்றனர். துணிகளால் சுற்றப்பட்ட மனுக்குலத்தை தன் நிர்வாணத்தால் மீட்டு நம்மை கடவுளின் மக்கள் என்ற நிலைக்கு உயர்த்துவார். இங்கு வெறுமையான தீவனத்தொட்டி வெறுமையைக் குறிக்கிறது, ஆனால் இங்கு வெறுமையான தீவனத்தொட்டியை குழந்தை நிறப்புகிறது. நமது வெறுமையான உள்ளத்தை நிறைக்க நற்கருணை என்னும் உணவு நிகழ்வின்மூலம் நம்மோடு உறவாடி தன்னையே உணவாக வழங்கியதுதான் நாம் இன்று கொண்டாடும் பகிர்வின் விழாவான கிறிஸ்மஸ். இந்திருப்பலியின் வழியாக அன்பை இழந்த உள்ளங்களுக்கு நம் இதயத்தைக் கொடுப்போம், பரிதவிக்கும் இதயங்களுக்கு அன்போடும், பணிவோம் இணைந்து வாழ்வோம் என்ற பரந்த உள்ளத்தை பெற்றிட இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அமைதியின் அரசரே எம் இறைவா, உம் பணியைச் செய்ய நீர் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள்,

குருக்கள், கன்னியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்களுக்கு உமது பிறப்பின் செய்தியை வெளிப்படுத்தி, அதன் வழியாக உலக மக்களிடையே நற்செய்தியின் நாயகர்களாக வலம்வந்து உமக்கேற்ற சாட்சியாளர்களாக வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. இம்மானுவேலாக எம் மத்தியில் பிறந்த பாலகனே, உமது உடனிருப்பு எங்களது வாழ்வில் இன்ப, துன்ப நேரங்கள், வேதனை, சோதனை போன்ற பல்வேறு பிரச்சனைகளால் வாழும் எங்களுக்கு உமது பிறப்பின் மகிழ்வை எங்களில் குடும்பங்களில் நிலவ எங்களின் வாழ்வாதாரத்தை மாற்றி புத்துயிரளித்து, புதுவாழ்வை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. எளிமையின் தோற்றத்தை ஏற்படுத்திக்கொண்டு எங்களுக்காக பிறந்திருக்கும் பாலகனே, எம் நாட்டிலும், மறைமாவட்டத்திலும், பங்குகளிலும், குடும்பங்களிலும் உமது பிறப்பின் பெருவிழாவைக் கொண்டாடுகின்ற நாங்கள் மற்றவர்களோடு பகிர்தல், புரிதல், மகிழ்தல் போன்ற கிறிஸ்துவின் மதிப்பீடுகளை ஒவ்வொருவரின் வாழ்விலும் சுடர்விட்டெரிய வேண்டிய வரத்தைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. என்றுமுள்ளத் தந்தையே இறைவா, போரினால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு நீர் என்றுமுள தந்தையாய், தாயாய் இருந்து அவர்களை பாதுகாத்து, அவர்களின் எதிர்காலத்தை வளமுள்ளதாக்க மாற்றி, உமது பிறப்பின் மகிழ்வினை மகிழ்ந்துக் கொண்டாடக்கூடிய வாய்ப்பினைப் பெற்றவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 26.12.2024 புனித ஸ்தேவான் முதல் மறைச்சாட்சி திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

முதல் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்ட சக்கரம், மின்சாரம், மின்விளக்கு, தொலைப்பேசி, மற்றும் கணினி இப்படி முதல் முதலாக நடைபெறும் நிகழ்வுகள் மனித வாழ்க்கையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதுபோலவே நாம் நினைவுக் கூர்ந்து கொண்டாடும் இன்றைய புனிதரும் முதல் முதலாகத் தன் இரத்தத்தைச் சிந்தி ஒரு வேத சாட்சியாக ஒரு புதிய பாதையைத் தோற்றுவித்து சென்றிருக்கிறார். யார் இந்த ஸ்தேவான்? திருத்தூதர்களின் திருப்பணியில் உதவுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தொண்டர்களில் ஒருவரே ஸ்தேவான் (திப. 6:5). ஸ்தேவான் அருளும், வல்லமையும் நிறைந்தவராய் மக்களிடையேப பெரும் அருள் செயல்களை செய்து வந்தார். இவர் எருசலேமில் இருந்த போது பலர் இவருக்கு எதிராக குற்றம் சாட்டி உரையாடினர். ஆனால் இவரது

ஞானத்தையும், தூய ஆவியின் வல்லமையால் இவர்மீது பொறாமைக் கொண்டு, மக்களில் சிலரை ஸ்தேவானுக்கு எதிராக தூண்டிவிட்டனர்.

பிறகு மூப்பர்களையும், மறைநூல் அறிஞர்களையும் இவருக்கு எதிராக கிளர்ந்தெழச் செய்தனர். இவருக்கு எதிராக பொய்ச்சாட்சிகளைத் தயாரித்து இவரை கைது செய்து தலைமைச் சங்கத்திற்கு இழுத்துச் சென்றனர். பரிசேயர்களும், சதுசேயர்களும் ஸ்தேவானை இழுத்து வந்து, இயேசுவை ஊருக்கு வெளியே சிலுவையில் அறைந்து கொன்றதுபோலவே இவரை கல்லால் எறிந்து கொன்றனர். இயேசு இறக்கும் தருவாயில் தன் தந்தையிடம் தன்னை துன்புறுத்தியவர்களுக்காக மன்னிப்பு மன்றாடியதுபோல (லூக். 23:34) ஸ்தேவானும் தன் மரண நேரத்தில் "ஆண்டவரே இந்த பாவத்தை இவர்கள்மேல் சுமத்தாதேயும் என்று வேண்டினார் (திபா.7:60). ஆண்டவராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக் கொள்ளும்" என்று வேண்டிக்கொண்டு உயிர் நீத்தார். இவரே இயேசுவின் திரு இரத்தம் பெற்றெடுத்த முதல் கனி, திருச்சபையின் முதல் கனி, திருச்சபையின் முதல் வேதசாட்சி. இப்புனிதரின் பாதையில் நாமும் பயணிக்க நம்முடைய திருச்சபை இன்று நம்மை அழைக்கிறது. புனித ஸ்தேவானிடமிருந்து நாம் கற்றுக்கொண்ட சாட்சியம், அஞ்சா நெஞ்சம், கடமை உணர்வு, தியாகம் போன்ற நல்ல குணங்களைப் பெற இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு தந்தையே, திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட திருச்சபையின் மக்களை தாய்க்குரிய பராமரிப்போடும், விசுவாசத்தின் வழியில் நடத்த தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நீதியின் தேவனே இறைவா, உண்மையான கடவுளின் வார்த்தைக்கு சான்றுபகரும் நற்செய்தியாளர்களும் மறைப்பரப்பு பணிபுரிவோரும் இன்றைய நாட்களில் எதிர்க்கொள்ளும் துன்பங்கள், துயரங்கள், எதிர்ப்புகள் அனைத்திலிருந்தும் உமது நற்செய்தியாளர்களை பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பே உருவான இறைவா, இன்றைய திருவிழாவினை சிறப்பிக்க காரணமாயுள்ள புனித ஸ்தேவானைப்போல இயேசுவின் சாட்சிகளாக இறுதிவரை அவரைப்போன்று தியாகமும், பகைவர்களை மன்னிக்கும் மனபக்குவமும், கடவுளின் வார்த்தையை சான்று பகரும் ஆழ்ந்த விசுவாசத்தையும் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 28.12.2024 புனித மாசில்லாக் குழந்தைகள் திருப்பலி

**முன்னுரை** திரு. பி. விக்டர்

மாசில்லாக் குழந்தைகளின் திருவிழா திருப்பலிக்கு உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். மாசற்ற குழந்தைகளின் திருவிழாவானது மீட்பர் இயேசு குழந்தையாக பெத்லகேமில் பிறந்த நாட்களில் நடந்த ஒரு நிகழ்வினை நினைவாகக் கொண்டு கொண்டாடப்பட்டு வருகிறது. இயேசுவின் பிறப்பால் தனது ஆட்சிக்கு ஆபத்து என்று நினைத்த ஏரோது, இயேசு யார் என்று தெரியாத நிலையில் பெத்லகேமிலும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் இருந்த இரண்டு வயதுக்குட்பட்ட அனைத்து ஆண் குழந்தைகளையும் கொலை செய்கிறான். ஆனால் இயேசு எகிப்துக்குத் தூக்கிச் செல்லப்பட்டு காப்பாற்றப்பட்டார். இயேசுவுக்காக குழந்தைகள் இறந்த இந்த நிகழ்வைத்தான் "மாசற்றக் குழந்தைகள் தினம்" என்று திருஅவை கொண்டாடி மகிழ்கிறது. இவ்விழாவானது கி.பி. 5ம் நூற்றாண்டுவரை திருக்காட்சி திருவிழாவோடு இணைந்து கொண்டாடப் பட்டு வந்துள்ளது. அதன் பிறகு குழந்தைகள் தினவிழாவாக டிசம்பர் மாதம் 28ம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. எகிப்து நாட்டில் இஸ்ரயேல் மக்கள் 430 வருடங்கள் அடிமைகளாக இருந்தனர். அடிமைத்தனத்திலிருந்து அவர்களை மீட்க மோசேவை கடவுள் உருவாக்கினார். அந்நாட்களில் இஸ்ரயேல் மக்களுக்கு பிறக்கின்ற ஆண் குழந்தைகள் அனைத்தும் கொல்லப்பட்டு வந்தன. ஆனால் கடவுள் மோசேவைக் காப்பாற்றினார்.

இஸ்ரயேல் மக்களின் அடிமை வாழ்விலிருந்து அவர்களை மீட்க மோசேயைக் கடவுள் காப்பாற்றினார். மக்களை பாவத்தின் அடிமை வாழ்விலிருந்து மக்களை மீட்க இயேசு காப்பாற்றப்பட்டார். மனிதன் எவ்வளவு முயன்றாலும் கடவுளின் திட்டத்தை முறியடிக்க மனிதனால் முடியாதென்பது இந்த இரு நிகழ்வுகளிலிருந்து நமக்குத் தெளிவாகிறது. இயேசுவைக் காப்பாற்ற மாசற்ற குழந்தைகள் தங்கள் உயிரைக் கொடுத்தனர். இயேசுவின் மீட்புத் திட்டத்திற்கு உதவினர். இயேசுவின் சட்டத் திட்டத்தில் நம்முடைய பங்கு என்ன? இதுவரை இதற்காக நாம் என்ன செய்துள்ளோம். தனது மீட்புத் திட்டத்தை நிறைவேற்றி முடித்த நம் ஆண்டவர் இயேசு அதன் நிறைவுப் பணியை நம்மிடம் வழங்கியுள்ளார். நாம் அதனை நிறைவேற்றி முடிப்போம் என்று நம்பியுள்ளார். அவரது நம்பிக்கையை நிறைவேற்ற, செயல்படுத்த நம்மை விட்டுக்கொடுப்போம். அதற்கான வரம்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எங்களுக்காக தம் உயிரையே கொடுத்தவரே, இவ்வுலகில் எம்மை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகளை ஆசீர்வதியும். சவால்கள், போராட்டங்கள் மிகுந்த இக்காலக் கட்டத்தில் உமது திருவுளத்தை நிறைவேற்றும் இவர்களுக்குத் தேவையான

ஞானத்தையும், தைரியத்தையும், ஆற்றலையும், வல்லமைகளையும் வழங்கி வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. குடும்பங்களை உருவாக்கி வழிநடத்திவரும் ஆண்டவரே, இத்திருப்பலியில் கலந்து கொண்டிருக்கும் யாவரையும் ஆசீர்வதியும். எங்கள் குடும்பங்களில் உமது அன்பும், ஆசியும் தொடரவும், எங்களுக்குள் நல்ல எண்ணம், அன்புறவு, விட்டுக்கொடுத்தல், சமாதானம், நம்பிக்கை யாவும் பெருகிடவும் எங்கள் வாழ்வு உமக்கேற்ற சாட்சிய வாழ்வாக மாறிடவும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. குழந்தைகளை ஆசீர்வதிக்கும் ஆண்டவரே இறைவா, எங்கள் குடும்பங்களில் உள்ள குழந்தைகளை உம்மிடம் ஒப்படைக்கின்றோம். அவர்களுக்கு நல்ல ஞானத்தையும், அறிவையும், தெய்வ பக்தியும், உடல் உள்ள நலத்தையும் வழங்கி சமுதாயத்தில் சிறந்தவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 29.12.2024 திருக்குடும்ப விழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

I. 1சாமு. 1: 20-22, 24-28 II. யோவா. 3: 1-2, 21-24 லூக். 2: 41-52

இறை இயேசுவின் இனிய திருக்குலமே, இன்றைய தினம் திருக்குடும்ப திருவிழாவை பெருவிழாவாக சிறப்பிக்க நம் திருஅவை நம்மை அழைக்கிறது. முதல் வாசகத்தில் சாமுவேலை அன்னா அவரை தந்தையான கடவுளுக்கே அர்ப்பணித்தாள். இரண்டாம் வாசகத்தில் கடவுளின் மக்களாக அவரோடு இணைந்து அவரின் கட்டளைகளை கடைப்பிடிக்க வேண்டுமென்று 1யோவானின் கூறப்பட்டுள்ளது. நற்செய்தியாளர் லூக்கா உணர்ந்துள்ளபடி இயேசு குழந்தையை 12 வயதில் எருசலேமில் காணாமல் போனதை உணர்ந்து அவரைத் தேடி ஞானிகள் நடுவில் கண்டபோது ஏன் என்னைத் தேடுகிறீர்கள், தந்தையின் கட்டளைகளை மதித்து நான் அவரது அலுவலில் ஈடுபட்டது தெரியாதா என்று தன் தந்தை யோசேப்பு தாய் மரியாள் ஆகியோரிடம் வழி தன்னை கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டதன் நோக்கத்தை உணர்த்தியபோதும் அவரை புரிந்து கடவுளாகிய தந்தையின் கட்டளைக்கு கீழ்ப்படிந்தார்கள் என்று கூறுகிறார்.

தந்தையான கடவுளின் மீட்புத்திட்டத்தில் தன்னை அர்ப்பணித்த போதும், பிறரின் துயர்துடைக்க தன் மகனிடம் பரிந்து பேசியபோதும், மிகுந்த தாழ்ச்சியுடனும், துயரத்துடனும் சிலுவையடியில் நின்ற போதும், மகனின் மரண வேதனைகளையும், பாடுகளையும் கண்ணிற்கு நேராக கண்டபோதும், தான் கடவுளின் அன்னையென்று நிருபித்தவள் நமது மரியன்னை. கனவில் தூதரின் வார்த்தைகளை செவிமடுத்து இறைவனின் திட்டத்திற்கு தன்னையும் அர்ப்பணித்து, தச்சுத் தொழிலாளியாக செயல்பட்டு பாலன் இயேசுவையும், அன்னை

மரியாளையும் பேணி பாதுகாத்த மாமுனிவர் யோசேப்பு தந்தைக்கும், தாயுக்கும் கீழ்ப்படிந்து, தச்சுத்தொழிலில் தந்தைக்கு உதவியாக இருந்த பாலன் இயேசு. வளர்ப்புத்தந்தை யோசேப்பின் நல்லொழுக்கமும், பண்பும் தாய் மரியாளின் கீழ்ப்படிதலும், தாழ்ச்சியும் ஒருசேரப் பெற்றவர் நம் இயேசு அவர்களிடமிருந்தே அதைப்பற்றி கொண்டவர், நம் இயேசு திருக்குடும்பமான இயேசுவும், மரியாளும், யோசேப்பும் வானகத் தந்தையின் ஆசிப்பெற்றவர்கள் வானத்தந்தையின் விருப்பத்திற்கிணங்க அவரின் திருச்சித்தத்தை நிறைவேற்ற உருவாக்கப்பட்ட இக்குடும்பம் திருக்குடும்பமாக மின்னி மிளிர்கிறது. போற்றிப் புகழப்படுகிறது. இத்தகைய தலைச்சிறந்த திருக்குடும்ப விழாவை கொண்டாடும் நாம் பேறுபெற்றவர்கள். அவர்களைப்போல நம் குடும்ப நம் வாழ செபித்து இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பே உருவான இறைவா, உம்வழித்தோன்றல்களான எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறக் கன்னியர் மற்றும் உமக்கு சொந்தமான மக்கள் அனைவரும் திருக்குடும்பத்தின் மேன்மைதனை உணர்ந்து திருஅவையென்னும் குடும்பத்தை ஒற்றுமையோடும், நேர்மையோடும் நிறைவேற்ற உமதருளைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. மன்னிக்கும் மனம் படைத்தவரே, குடும்பங்களில் ஏற்படும் பிரிவினைகள், மனத்துயரங்கள், வேதனைச் சோதனைகள், பேராசை, பொறாமை போன்ற தீயக்குணங்களை விலக்கி, அன்புடனும், ஒன்றுமையுடனும், குடும்பத்தை கட்டிக்காத்து, பிள்ளைகளை நேரிய வழியில், இறைவழியில், நடத்தக் கூடிய நல்ல மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. படைப்பின் பரம்பொருளே, நாட்டையாளும் தலைவர்கள் தங்களின் சுயநலத்திற்காக பாடுபடாமல் மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, அவர்களின் தேவைகளை உணர்ந்து, செயல்படக்கூடிய பரந்த உள்ளத்தையும், சேவை மனப்பான்மையும் அவர்களுக்குத் தந்து பாகுபாடுகளின்றி அனைவரையும் ஒரே மனதோடு வழிநடத்தக்கூடிய நல்லுள்ளத்தை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. எங்களை பாவச்சுமையிலிருந்து மீட்டெடுக்கப் பிறந்த பாலகனே, இன்றைய இளைய தலைமுறையினர் தங்களின் வாழ்வில் நடக்கின்ற ஒவ்வொரு நிகழ்விலும், தாங்கள் செய்கின்ற செயல்களை சற்று சிந்தித்து செயல்படவும், எதிர்காலத்தில் நாம் இறைவனுக்கு முன்பாக எந்நிலையில் வாழ்கின்றோம் என்பதையும் ஆராய்ந்து பார்த்து தவற்றைத் திருத்தி உமக்கேற்ற பாதையில் நடக்கக் கூடிய ஆற்றலைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 31.12.2024 இரவு திருவிழிப்பு நன்றி ஆராதனை செபவழிபாடு

**முன்னுரை** திரு. P. விக்டர்

இறையேசுவில் பிரியமானவர்களே, 2024ம் ஆண்டின் இறுதி நாளின் இறுதி மணித்துளிகளில் நாம் இருக்கின்றோம். இன்னும் சில மணித்துளிகளில் 2025ல் புதிய ஆண்டைக்காண ஆவலாய் இருக்கின்றோம். இந்த மகிழ்ச்சியான சூழலில் இந்த ஆண்டு முழுவதும் ஆண்டவராகிய கடவுள் நமக்குச் செய்த எல்லா நன்மைகளுக்கு நன்றி சொல்வதற்காக இங்கு குழுமியுள்ளோம். இந்த நன்றி ஆராதனையை ஆண்டவருக்கு ஏற்றவிதத்தில் நடத்தி முடிக்க தூய ஆவியானரின் துணைவேண்டி இந்நன்றி ஆராதனையைத் தொடங்குவோம்.

**தூய ஆவியார் பாடல்:** ஒ பரிசுத்த ஆவியே அல்லது ஊற்றுத்தண்ணீரே...

**ஆராதனை வழிபாடு:**

நாம் ஆராதிக்கும் கடவுள் "இஸ்ரயேலின் புகழ்ச்சிக்குமேல் வீற்றிருக்கிறார். அவரை ஆராதிப்பதை விரும்பி வரவேற்பாராக,அதை எதிர் நோக்கியவராக "இதோ இந்த மக்களை எனக்கென்று உருவாக்கினார். இவர்கள் என் புகழை எடுத்துரைப்பர்" (எசா. 43:2) என்று இறைவன் நம்மிடம் எதிர்பார்கின்றவராக இருக்கின்றார். ஆகையால் நாம் ஆண்டவரை ஆராதிக்க வேண்டும். நாம் ஆராதிப்பதால் ஆண்டவரின் திருப்பெயருக்கு மாட்சி உண்டாகிறது, மேலும் மண்ணால் ஒரு பீடம் அமைத்து உன் பலிகளைச் செலுத்து, நீ என் பெயரால் பலிகளை செலுத்தும் இடமெல்லாம் வந்து நான் உன்னை ஆசீர்வதிப்பேன் என்று கூறினார். ஏனெனில் நம்மை ஆசீர்வதிப்பதை கடவுள் விரும்புகிறவராக இருக்கின்றார். எனவே அவர் நம்மை ஆசீர்வதிக்க வேண்டி நாம் ஒன்றாக இணைந்து அவரை ஆராதிப்போம். ஒவ்வொரு ஆராதனைக்குப் பிறகும்

**"ஆண்டவரே உம்மை ஆராதிக்கின்றோம்"** என்று சொல்லி ஆராதிப்போம்.

1. ஆண்டவரே நீர் எத்துணை மேன்மைமிக்கவர், நீர் மாண்பையும் மாட்சிமையும் அணிந்திருப்பவர், எல்லா இனத்தாரிடையேயும் உம்மைப் புகழ்ந்து பாடுவேன், ஏனெனில் வானளவு உயர்ந்துள்ளது உமது பேரன்பு (ஆண்டவரே....)

2. ஆண்டவரே உமக்கு நிகரானவர் யார்? உம்மைப்போல வானளாவிய உயரத்தில் வீற்றிருப்பவர் யார்? ஆண்டவரே நீரே எங்களுக்கு ஆசியளிப்பவர். எங்கள் குடும்பங்களை பெருகச் செய்பவர் நீரே, எங்கள் பிள்ளைகளை வளரச் செய்கிறவர் நீரே. (ஆண்டவரே....)

3. ஆண்டவரே நீரே எம்மைக் காண்கிறவர், நீர் ஒருவரே எம்மைக் காக்கின்றவர், எமது வலப்பக்கம் இருப்பவர் நீரே, எம்மோடு நிழலாக இருந்து பாதுகாக்கிறவர் நீரே. (ஆண்டவரே....)

4. ஆண்டவரே நீரே எம்மை ஆய்ந்து அறிந்திருக்கின்றீர், நாங்கள் அமர்வதையும் எழுவதையும் அறிந்திருக்கிறீர். எமது வழிகள் எல்லாம் உமக்கே தெரிந்திருக்கிறது. (ஆண்டவரே....)

5. ஆண்டவரே நீர் மாண்பு மிக்கவர், பெரிதும் போற்றுதலுக்குரியவர், உமது மாண்பு எங்கள் அறிவுக்கு எட்டாதது. உலகின் அரசுகளும், எல்லா மக்களினங்களும், தலைவர்களும், ஆட்சியாளர்களும் இளைஞரும், முதியோரும், சிறியோரும் ஆண்டவரே உம்மைப் புகழ்கின்றனர். (ஆண்டவரே....)

**ஆராதனை பாடல்** 1: ஆராதிப்பேன் நான்... 2: அன்பு கூறுவேன்...

**நன்றி வழிபாடு:**

இந்த 2024ம் ஆண்டு முழுவதும் ஆண்டவர் நம்மோடிருந்து நமக்குச் செய்துவந்த அனைத்து நன்மைகளுக்காக நன்றி கூறி மகிழ்வோம். ஒவ்வொரு நாளும் நமக்கு இலவசமாக உயிர்மூச்சை வழங்கி நம்மை உயிரோடு வைத்திருந்ததற்காக அவருக்கு நன்றி கூறுவோம். நாம் கையிட்டு செய்யும் ஒவ்வொரு செயலையும் வெற்றியாய் மாற்றித்தந்த ஆண்டவருக்கு நன்றி கூறுவோம். நாம் பணி செய்யும் பணிதளங்களிலே நம்மை உயர்த்திவைத்த தயவுக்காக நன்றி கூறுவோம். நாம் பணிசெய்யும் பணித்தளங்களிலே நம்மை உயர்த்தி வைத்த தயவுக்காக நன்றி கூறுவோம். தொழில் செய்யும் நிலையில் பற்பல போட்டிகள், பொறாமைகள், நிறைந்திருந்தாலும் நம்மை வெற்றியாளராய் வைத்திருந்ததற்காக நன்றி கூறுவோம். பள்ளிகள், கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவ மாணவியருக்கு உடனிருந்து, ஊக்கமளித்து, ஞானத்தையும், அறிவையும் நல்ல உடல்உள்ள நலன்களையும் வழங்கி கல்வியில் சிறந்து விளங்க செய்துவந்த உதவிகளுக்காக நன்றி கூறுவோம். 2025ம் ஆண்டின் தொடக்கத்தைக் காணச் செய்த அவரது பேரிரக்கத்திற்காக நன்றி கூறுவோம். ஒவ்வொரு நன்றி மன்றாட்டுக்குப் பிறகும்

**"ஆண்டவரே உமக்கு நன்றி கூறுகிறோம்"** என்று சொல்லவும்.

1. கடவுளிடம் அன்பு கூர்பவர்களாகிய நமக்கு நமது நன்மைக்காகவே சகலத்திலும் ஒத்துழைத்து நமக்கு உதவி செய்ததற்காக... ஆண்டவரே உமக்கு நன்றி கூறுகிறோம்.

2. அஞ்சாதே, நான் உன்னோடு இருக்கிறேன், உனக்கு உதவிகள் செய்வேன், என்னுடைய நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன். ஏனெனில் நான் உன் கடவுள் என்று கூறி எமக்கு வலிமையளித்து உதவி செய்ததற்காக (ஆண்டவரே....)

3. நாங்கள் எங்கள் வீட்டைவிட்டு வெளியே செல்லும்போதும் மீண்டும் வீட்டுக்கு உள்ளே வரும்போது இப்போதும் எப்போதும் எம்மைப் பாதுகாக்கின்றதற்காக (ஆண்டவரே....)

4. ஆண்டவரே நாங்கள் செய்த அறச் செயல்களை முன்னிட்டு அல்ல, மாறாக உமது இரக்கத்தை முன்னிட்டு புதுப்பிறப்பின் நீரினாலும், தூய ஆவியாலும் மீட்பளித்த உமது பேரன்பு எங்கள்மீது இருப்பதற்காகவும் (ஆண்டவரே....)
5. எமது வலுவற்ற நிலையில் எமக்குத் துணைநின்று, எதற்காக, எப்படி என்று விண்ணப்பிக்கத் தெரியாத வேளைகளில் சொல்லொண்ணா எமது பெருமூச்சுகள் வாயிலாக எங்களுக்காகப் பரிந்து பேசி செபித்து உதவிகள் செய்வதற்காக (ஆண்டவரே....)

**நன்றி பாடல்:** நன்றியால் துதிப்பாடு... நீ செய்த நன்மை....

**மன்னிப்பு வழிபாடு:**

ஆண்டவராகிய கடவுள் நமது பாவங்களை மன்னிக்கரவராகவும் அவற்றை மறக்கிறவரும் மீண்டும் அவற்றை நினையாதவருமாய் உள்ளளார். "ஏழு முறையல்ல, ஏழுமுறை எழுபதுமுறை மன்னியுங்கள்" என்று நமக்குக் கற்றுத்தந்த ஆண்டவர் சிலுவையில் அறையுண்ட வேளையில் தமது தந்தையிடம் "தந்தையே இவர்களை மன்னியும், ஏனெனில் இவர்கள் தாங்கள் செய்வது இன்னது என்று தெரியாமல் செய்கிறார்கள்" (லூக். 23:34) என்றுகூறி தான் கற்பித்த மன்னிப்பை வாழ்ந்து காட்டினார். இதனால்தான் நாம் பிறரை மன்னிக்க கடமைப்பட்டவர்கள் என்று கற்றுத்தந்தார். அவர் கற்றுத்தந்த வேண்டுதலில் எங்களுக்குத் தீமை செய்தோரை நாங்கள் மன்னிப்பதுபோல், எங்கள் குற்றங்களை மன்னியும்" (மத்.6:12) என்று சொல்லவைத்தார். நாம் பிறரை மன்னியாதபோது நமது மன்னிக்கப்பட்ட பாவங்களும் மீண்டும் கணக்கிலெடுக்கப்படும் (மத்.18:1-33) இந்த 2024ம் ஆண்டு முழுவதும் நாம் செய்த தவறுகளை, குற்றங்களை, மன்னியாமை, கோபங்கள், மனக் கசப்புகள், வைராக்கியங்கள், வார்த்தையினால் பிறரைக் காயப்படுத்திய செயல்கள், அவதூறாக பேசியவைகள், கீழ்ப்படியாமை, சுயபெருமை, தவறுதலாக பிறரைக் குற்றப்படுத்துதல் இதுபோன்ற பலவிதமான செயல்களால் ஆண்டவரை வருத்தப்படுத்திய செயல்களை நினைத்து மனம் வருந்தி மன்னிப்பு வேண்டுவோம். ஒவ்வொரு மன்னிப்பு மன்றாட்டுக்குப் பிறகும்

**"ஆண்டவரே எங்கள் குற்றங்களை மன்னியும்"** என்று சொல்லவும்.

1. ஆண்டவரே உமது அன்பையும், பேரன்பையும் இரக்கத்தையும் எமக்கு முடியாகச் சூட்டுகிறீர். இந்த பேரன்புக்கும் இரக்கத்திற்கும் எதிராகச் செய்யும் குற்றங்களிலிருந்து எம்மை மன்னித்தருளும்
2. எங்கள் பாவங்களுக்கு ஏற்ப எம்மை நடத்தாத ஆண்டவரே, எமது குற்றங்களுக்கு ஏற்ப எம்மைத் தண்டியாத ஆண்டவரே, உமக்கு எதிராகச் செய்த குற்றங்களுக்காக ஆண்டவரே எங்களை மன்னித்தருளும்.

3. நீடிய பொறுமையும், பேரன்புமுள்ள ஆண்டவரே, நீர் எப்போதும் கடிந்துக்கொள்ளாதவரும், என்றென்றும் சினம் கொள்ளாதவருமாய் இருப்பதால் எங்கள் மீறுதல்களை மன்னிக்கும்படி மன்றாடுகிறோம்.
4. மேற்கிலிருந்து கிழக்கு எவ்வளவு தொலைவிலுள்ளதோ அத்தனை தொலைவிற்கு எமது குற்றங்களை எம்மிடமிருந்து அகற்றுகின்ற ஆண்டவரே உமக்கு எதிராக நாங்கள் செய்த குற்றங்களை மன்னித்தருளும்.
5. தந்தை தம் பிள்ளைகளுக்கு இரக்கம் காட்டுவதுபோல உமக்கு அஞ்சுபவர்மீது இரக்கம் காட்டுகிறவரே, பிறர்மீது இரக்கம் காட்டாத, மன்னியாத எங்கள் செயல்களுக்காக எங்களை மன்னித்தருளும்.
6. "சின்னஞ்சிறிய சகோதரர்களுக்குச் செய்வதெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்று அறிவுறுத்திய ஆண்டவரே, எமது வாழ்வில் நாங்கள் சந்திக்கின்ற மக்களில் உம்மைக் காண முயற்சி செய்யாத வேளைக்காக எங்களை மன்னித்தருளும்.

**இறுதி நன்றிப் பாடல்:** நன்றியால் துதிப்பாடு நம் இயேசுவை...

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## புனித பிலிப்பு ரினால்டி - வாழ்வு தரும் பாடம்

திரு. ஜான் அலெக்ஸ்

தயவுள்ள இதயத்தில் பக்தி பிறக்கிறது, கடவுளின் பிரசன்னத்தில் உருவான ஒரு ஆன்மாவானது, முறையே தியானம், சுய ஆன்ம பரிசோதனை, திருமறை வாசகங்கள் மீதான ஈடுபாடு ஆகியவற்றின் வழியாக தன்னை வலிமைப்படுத்திக் கொள்கிறது. நாம் தியானிப்பதற்கு ஆன்ம பரிசோதனை மிக முக்கியம். ஒரு செயலாக்கமுள்ள செபம், நம் பலவீனங்களையும் தேவைகளையும் நம் அறிவுக்கு எட்டச் செய்வதும் புரிந்துக்கொள்ள செய்வதும் தியானமாகும். அது கடவுளின் மீது நாம் கொள்ளும் அன்பை எடுத்துக்காட்டுகிறது. இந்த சிந்தனைகளை வெறும் வார்த்தைகளால் மட்டுமே அல்ல வாழ்ந்தும் காட்டிய பெருமை அருளாளர் பிலிப் ரினால்டியைச் சாரும். இவர் சலேசிய சபை குருவானவர், தொன் போஸ்கோவின் உள்ளுணர்வையும் தனிவரத்தையும் மொத்த சலேசிய குடும்பத்திற்கும், திருஅவைக்கும் தன் வாழ்வின் மூலம் சான்று பகர்ந்தவர்.

தொன் போஸ்கோவின் வழியில் 3ம் வழித்தோன்றலாகவும் சலேசிய சபையின் 4ம் உலக தலைவராகவும், உலகில் ஓர் புதிய வடிவமான அர்ப்பண வாழ்விற்கான வாய்ப்பிருப்பதை உணர்ந்து, "தொன் போஸ்கோவின் தன்னார்வத் தொண்டர்கள்" என்ற அமைப்பைத் துவங்கி அதனை சாத்தியமாக்கியவர் அருளாளர் ரினால்டி அவர்கள். தேவ அழைத்தலுக்கு (துறவறமாக இருந்தாலும் பொதுநிலையாக இருந்தாலும்) பெரிதும் உதவியாக, உடன்பயணித்து வழிநடத்திய மாபெரும் சலேசியர்

என்பதை இவரின் வாழ்வு நமக்கு எடுத்துரைக்கிறது. அவற்றில் மிக முக்கியமான சான்றாக, அவரது நெருங்கிய உறவினரும் சலேசிய குருவுமாகிய அருட்பணி பீட்டர் ரினால்டி அவர்களின் குறிப்பேடுகளில் கொடுக்கப்பட்டுள்ளவற்றில் இருந்து ஒரு சில நிகழ்வுகளை மட்டும் இக்கட்டுரையில் நாம் தெரிந்துக் கொள்வது மிகவும் பொருத்தமாக அமையும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துமில்லை.

**ஆன்மீக வாழ்வில் அதி உன்னதர்:**

தமது காலங்களில் தொன் போஸ்கோவை அப்படியே பின்பற்றி செயல்படுவதில் தமது ஆற்றலனைத்தையும் செலவிட்டவர். சலேசிய சபை பற்றிய படிப்பை வளர்த்தெடுப்பதில் பற்பல முயற்சிகளையும் மேற்கொண்டதோடு, ஆன்மீக வாழ்வில் உயர்ந்த தலைவராக விளங்கினார். சலேசிய ஆன்மீகத்தைப் புதுப்பிப்பதில் பெரிதும் திறமையானவர் அருட்தந்தை என்ற வகையில் இவரது திறமைகளும், செயல் தொடக்க நலன்களும் பலரும் போற்றும் படியாக ஒளிர்ந்தன. வேலை செய்யும் இளம்பெண்களின் ஆன்ம, சமூக நலன்களில் துணை நிற்கும் பொருட்டு பல உருவாக்க மையங்களை நிறுவினார். உணர்வுப்பூர்வமான சிக்கல்கள் நிறைந்த காலக்கட்டங்களில் அச்சகத் தொழில்களை நிறுவி, சலேசியச் அருட்சகோதரிகளுக்கு சிறந்த வழிகாட்டியாகவும் ஆதரவு அளிப்பவராகவும் திகழ்ந்தார் தந்தை ரினால்டி. சலேசிய உடனுழைப்பாளர்களுக்கும் ஊக்கமும் அரவணைப்பும் தந்தார். தொன் போஸ்கோ கல்விக் நிறுவனங்களில் பயின்ற இருபாலருக்குமான முன்னாள் மாணவர் அமைப்பினை ஏற்படுத்தியவரும் இவரே.

**நான் இருக்குமிடம் உங்களுக்கே தெரியும்:**

அக்காலத்தில் துவக்க நிலை கல்விக்கு மேல் படிப்பை தொடர வேண்டுமானால் கட்டாயம் தூரின் நகரில் செயல்படும் சலேசிய ஆரட்டரிகள்தான் ஒரே வழியாக இருக்கும். பீட்டரும் தன் தம்பி பவுலும் இதற்கு விதிவிலக்கல்ல ஆகவே, தூரின் சென்று சலேசிய ஆரட்டரியில் இருவரும் சேர்ந்தனர். அதன் பொறுப்பாளராக அருளாளர் பிலிப் ரினால்டி பணியாற்றிக் கொண்டிருக்கிறார். மாலை நேரம், ஆரட்டரியில் பீட்டருக்கு ஒருவித படபடப்பு. வீட்டின் நினைவுகள் வந்துவந்து போகிறது. இரவு உறங்கச் சென்றதும் கண்களில் நீர் தாரைதாரையாக வடிந்தது. "காலையில் முதலாவதாக அருட்பணி பிலிப் ரினால்டியை சென்று பார்த்து, நான் வீட்டிற்கு செல்ல விரும்புகிறேன் என்று சொல்லப் போகிறேன்" என்று தம் தம்பி பவுலிடம் சொல்கிறார் பீட்டர். மறுநாளோ, சாக்லேட் பெட்டி அவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதை பார்க்கிறார்கள். அதில் "நாளை காலை கன்னியர் இல்லத்தில் நடைபெறும் திருப்பலிக்கு உதவியாக நீங்கள் இருவரும் வந்தாலென்ன.... அதோ நேரே தெரிகிற கட்டிடத்தின் வரான்டாவில் காலை 6.45க்கு உங்களை சந்திக்கிறேன். கன்னியர் இல்லத்தில் அருமையான காலை உணவு கிடைக்கும். இப்போது

நீங்கள் ஓடி விளையாடுங்கள், முகத்தில் தெளிவோடு இருக்க அது உதவும்" என்று அருளாளர் ரினால்டி எழுதிய குறிப்பும் இருந்தது. இந்த நிகழ்விற்கு பிறகு அவர்களுக்கு வீட்டுக்கு ஓடிடும் எண்ணமே வரவில்லை. நன்றாக படித்து வளர்ந்தார்கள் என்பதை வரலாறு கூறுகிறது. இதுவே அருளாளர் ரினால்டியின் உடனிருத்தலுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகவும் அமைந்தது.

## உடனிருந்து வழிகாட்டுதலில் முன்மாதிரி:

அக்காலத்தில் கடிதங்கள் வாயிலாகவே பெரும்பாலான தகவல் தொடர்புகள் இருந்தன என்பது நாம் அறிந்ததே. ஆனால் அருளாளர் ரினால்டிக்கு வரும் கடிதங்கள் எத்தகையதாயினும், யாரிடமிருந்து வந்திருந்தாலும் அதற்கு உடனே பதில் கடிதம் அனுப்பாமல் இருந்ததே கிடையாது இது ஒரு சிறந்த பண்பு. ஒருமுறை 1928ல் அருட்தந்தை சீசர் என்பவர் நியு யார்க்கில் உள்ள சலேசிய உயர்நிலை பள்ளிக்கு இயக்குநராக பணியாற்றும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். உடனே அவர் அருளாளர் ரினால்டிக்கு கடிதம் எழுதுகிறார். "எனக்கு 28 வயதே ஆகிற நிலையில், ஒரு உயர்நிலை பள்ளிக்கு பொறுப்பாளராகவும் அங்குள்ள சலேசிய குழுமத்திற்கு இல்லத்தந்தையாகவும் பணியாற்றுவது எப்படி சாத்தியமாகும்? அங்கு ஏற்கனவே பணியாற்றும் பலர் என்னைவிட வயதிலும் அனுபவத்திலும் மூத்தவர்களாயிற்றே. தயவு செய்து என்னுடைய இந்த நிலைமைக்கு நீங்கள்தான் ஒரு வழி செய்ய வேண்டும்" என்பது தான் அந்த கடிதம். அருளாளர் ரினால்டி பின்வருமாறு பதிலளிக்கிறார்:

## நானல்ல... இறை திட்டமே இது:

ஒருமுறை அருளாளர் ரினால்டி உடல்நலம் சோர்ந்து சிகிச்சை பெற்று வருகிற அத்தருணத்திலும் தந்தை பீட்டர்மீது அவரின் அன்பும் அரவணைப்பும் சற்றும் குறையவில்லை. வெறும் 15 நிமிடங்கள் மட்டுமே அவரை சந்திக்க வேண்டும் என்று நேரம் ஒதுக்கிய அவருடைய செயளாலர் என்றாலும் பாசத்தோடு பேசிக்கொண்டே இருந்த அருளாளர் ரினால்டி ஏறக்குறைய 1 மணி நேரம் ஆகியது. குறிப்பாக "பீட்டர், உம் குடும்பத்திற்கு நன்றியோடு இரு... நீ எவ்வளவு ஆசீர்வாதங்களுக்கு உரியவன் என்பதை உணர்ந்து செயல்படு..." என்றார் அருளாளர் ரினால்டி. அதற்கு மறுமொழியாக தந்தை பீட்டர், "அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் நீரே காரணமானவர்" என்றார். "நானல்ல பீட்டர்.... இது இறை திட்டம். கடவுளிடமிருந்து வந்தவை" என்று பதிலளித்தார் அருளாளர் ரினால்டி.

## தொன் போஸ்கோவைப் போலவே ஒரு புனிதர்:

அருட்சகோதரராக பீட்டர், 1931 செப்டம்பரில், தூரினில் சுமார் 300 மாணவர்களை கொண்ட தொன் போஸ்கோ சர்வதேச இறையியல் நிறுவனத்தில் இறையியல் பயில அனுமதிக்கப்பட்டார். இங்கு மாணவராக சேர்ந்தவர் நான்கு வருடங்கள் படித்து பின்னர் ஒரு

குருவாக இவ்விடத்திலிருந்து புறப்படுவோம் என்ற மகிழ்ச்சியோடு, இந்த காலங்களில் அருளாளர் ரினால்டி அவர்கள் பணியாற்றும் இல்லத்திற்கு அருகில் இந்நிறுவனம் இருப்பதால் அவரை எளிதில் சென்று பார்த்து வரலாம் என்ற இன்னொரு கூடுதல் மகிழ்ச்சி அவருக்கு இருந்தது. டிசம்பர் 5, 1931ல் காலை 10.30க்கு அருளாளர் பிலிப் ரினால்டி மறைந்தார் என்ற செய்தி கேட்டதும் உடனே அவரை காண சென்றார் பீட்டர். அங்கு மேதகு தூரின் பேராயர்-கர்தினால் அவர்கள் அருளாளர் ரினால்டியின் உடலருகே முழந்தாலிட்டு செபித்துக் கொண்டிருக்கிறார். அருகில் சென்று முழந்தாலிட்ட பீட்டருக்கு தன் கண்களில் வரும் கண்ணீருக்கு தடைபோட முடியவில்லை. மேதகு கர்தினால் அவர்கள், பீட்டரின் தோள்களில் தன் கரங்களை வைத்து ஆறுதலாக, "நீ அழக்கூடாது, அவர் ஒரு புனிதர். தொன் போஸ்கோவைப் போலவே ஒரு புனிதர், எனவே அழுவதை நிறுத்து" என்று சொன்னதை 1990ல் ஏப்ரல் 20ம் நாள், தூய பேதுரு பேராலயத்தில் அப்போதைய திருத்தந்தையோடு இணைந்து திருப்பலி நிகழ்த்தும்போது நினைத்து ஆண்டவருக்கு தன் நன்றியை காணிக்கையாக்கினார்.

### நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை சொல் செய்கிறேன்

இதுதான் அருளாளர் ரினால்டி இறப்பதற்கு 2 நாட்களுக்கு முன் பீட்டருக்கு எழுதிய கடிதம், பீட்டருக்கு மட்டுமல்ல நமக்கும், உலகெங்கும் பணியாற்றி வரும் சலேசிய குடும்பத்தினருக்கும் இது பொருந்தும். "அன்பு தந்தை பிலிப் ரினால்டி அவர்களே, கடவுள் என்னை இவ்வுலகத்திலிருந்து அழைக்கும்போது, நான் சிறுவனாக இருக்கும்போது நீர் செய்தது போலவே என் கரத்தைப்பிடித்து கடவுளிடத்திற்கு அழைத்து செல்லும்" என்பது தந்தை பீட்டர் அவர்களின் விண்ணப்பம்.

## திருஅவைச் செய்திகள்

திரு. சாண்டோ

### புனிதர்களின் வாழ்வு நற்பண்பு மதிக்கப்பட்டு, போற்றப்பட வேண்டும்

திருஅவை நாள்காட்டியில் ஒரு புதிய நாளை சேர்ப்பதற்காக அல்ல மாறாக, அந்தந்த தலத்திருஅவைகளில் புனித வாழ்வு வாழ்ந்தவர்களின் வாழ்வும் அவர்கள் விட்டுச்சென்ற நற்பண்பும் மதிக்கப்பட்டு, போற்றப்பட வேண்டும் என்பதற்காகவே நவம்பர் 9 புனித வாழ்வு வாழ்ந்தவர்கள் நினைவு கூறப்படுகின்றார்கள். வருகின்ற யூபிலி 2025ஆம் ஆண்டு முதல் நவம்பர் 9 தூய இலாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு விழாவன்று ஒவ்வொரு தலத்திருஅவையும் புனிதர்களை மட்டுமன்றி அருளாளர்கள், இறைஊழியர்கள், வணக்கத்திற்குரியவர்கள், அனைவரையும் நினைவுகூர வேண்டும் என்று கடிதம் ஒன்றின் வழியாக எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். ஒவ்வொரு புனிதர்கள் மற்றும் மறைசாட்சியாளர்களுக்கென தனிப்பட்ட நினைவுநாள் திருஅவை வழிபாட்டு நாள்காட்டியில் இருந்தாலும் திருஅவையைச் சார்ந்த புனிதர்களைப்போலவே, அருளாளர்கள், இறை

ஊழியர்கள், வணக்கத்திற்குரியவர்கள், அனைவரின் புனிதவாழ்வு நினைவு கூறப்பட வேண்டும் என்று கடிதம் ஒன்றின் வழியாக எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

**சிறைப்பணியாற்ற முன்வாருங்கள்**

குருத்துவ அருள்பொழிவு பெறவிருக்கும் மாணவர்கள் சிறைப் பணியாற்ற முன்வர வேண்டும் என்றும், கலாச்சாரம், சமூகம், தீமைகள், மறைக்கப்பட்ட பாவங்கள் போன்றவைகள் சங்கிலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கும் மக்களை மீட்க முன்வர வேண்டும் என்றும் வலியுறுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ். நவம்பர் 16 சனிக்கிழமை வத்திக்கானின் கொன்சிஸ்தோரோ அறையில் Pamplona, Tudela, San Sebastián மறைமாவட்டம் மற்றும் Redemptoris Mater சபையின் குருத்துவ மாணவர்கள் என ஏறக்குறைய 40 பேரைச் சந்தித்தபோது இவ்வாறு கூறினார். அரசு சிறைச்சாலைகளுக்கு சென்று அங்குள்ளவர்களுக்கு நம்பிக்கையையும் ஆறுதலையும் வழங்குங்கள் என்று எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், ஆறுதல் எண்ணெயையும், எதிர்நோக்கு என்னும் திராட்சை இரசத்தையும் அவர்களுக்கு வழங்குங்கள் என்றும், சுரண்டல், ஊக்கமின்மை, அறியாமை மற்றும் கடவுளை மறத்தல் போன்றவற்றினால் வாடும் மக்களுக்காகப் பணியாற்ற வலியுறுத்தினார்.

**உலகை அழகுபடுத்துவது என்பது, அமைதியைக் கட்டியெழுப்புவதாகும்**

கடவுளின் படைப்புத் தொழிலில் ஒத்துழைப்பை தருவதுடன்,பொது நலனுக்கான அர்ப்பணத்தை ஊக்குவிப்பதாகவும் உள்ளது. இறைவனின் படைப்புத் தொழில் வழியாக ஒத்துழைப்பை வழங்குவதால் கைவினைஞர்கள் எப்போதும் தன் இதயத்திற்கு மிக அருகாமையில் இருக்கிறார்கள் என்றுரைத்தார். நாம் எவ்வளவு வழங்குகிறோம் என்பதைவிட எவ்வளவு முயற்சி செய்கிறோம் என்பது முக்கியத்துவம் நிறைந்தது எனவும் இக்கூட்டமைப்பின் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம் பொறுப்புணர்வின்மீது இறைவன் நம்பிக்கைக் கொண்டிருப்பதால், நாம் அச்சத்தை வெற்றி கண்டு நம்பிக்கையைக் கைக்கொள்ள வேண்டுமெனவும், படைப்பாற்றலை அழிவுக்குள்ளாக்கும் அல்லது முடக்கிப்போடும் அச்சத்தை அனைத்து கைவினைஞர்களும் ஒதுக்க வேண்டுமென கேட்டுக்கொண்டதுடன், ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னாலும் நம் திறமைகள் மட்டுமல்ல, இறைவனின் கரமும் நம்மை வழி நடத்துவதை நாம் உணரவேண்டுமென கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

**பொதுநலனைக் கட்டியெழுப்ப பெண்களின் குரல்கள் பங்காற்றுகின்றன**

**திருத்தந்தை பிரான்சிஸ் :** தனி மனிதர்கள் தங்கள் நலனையும் தாண்டி சிந்திக்க மறுப்பதால், இவ்வுலகில் மோதல்களும், பிரிவினைகளும் மலிந்து கிடக்கின்றன. கத்தோலிக்க சமூகப் படிப்பினைகளின் மூலைக் கல்லாக பொது நலன் என்பது இருப்பதால், வாழ்வு தொடர்புடைய

அனைத்து விடயங்களும் இதயத்திற்குள் பேணப்பட வேண்டும் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ். வாழ்வுக்கான திருப்பீடக் கழகத்தால், "பொது நலன் குறித்த கலந்துரையாடல், கோட்பாடு மற்றும் நடைமுறை" என்ற தலைப்பில் ஏற்பாடுச் செய்யப்பட்ட கருத்தரங்கில் பங்குபெற்றோருக்கு திருத்தந்தை அனுப்பியுள்ள செய்தியில், பொதுநலனைக் கட்டி எழுப்புவதில் பெண்களின் குரல்கள் மிகப்பெரிய அளவில் பங்காற்றுகின்றன, என தெரிவித்துள்ளார். இந்த கலந்துரையாடலில் இரு முக்கியக் கூறுகளை திருத்தந்தை கூறுகிறார். முதலில் இது வாழ்வுக்கான திருப்பீடக் கழகத்தால் ஏற்பாடுச் செய்யப்பட்டிருப்பதால், அனைத்துச் சூழல்களிலும் மனித வாழ்வை பாதுகாப்பதை வலியுறுத்துவதாக உள்ளது. இரண்டாவது கருத்தாக சமூகத்திலும் திருஅவையிலும் பெண்களின் குரல்கள் அதிகமாகச் செவிமடுக்கப்பட வேண்டிய தேவை உள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

## இறைவாக்கினர்களின் பாடல்

**(அனைவரும் நிற்கவும்)**

**முதல்வர் : தேவராஜன் வருவார் / வாரும் ஆராதிப்போமே.**

**எல் : தேவராஜன் வருவார் / வாரும் ஆராதிப்போமே.**

1. சீயோனே அகமகிழ்வாய் / எருசலேம் மகளே பூரிப்படைவாய் / இதோ ஆண்டவர் வருவார். அந்நாளில் பேரொளி வீசும், / மலைகள் இன்பம் துளிர்க்கும் / குன்றுகள் பாலும் தேனும் பொழியும் / ஏனெனில் மாபெரும் தீர்க்கதரிசி வருவார்/ அவர் எருசலேமைச் சீராக்குவார் / (தேவ)

2. இதோ தாவீதின் குலத்தினின்று/ மனுதேவன் வருவார் / அவர் சிம்மாசனம் ஏறுவதைக் காண்பீர். அந்நாள் நீங்கள் ஆனந்தம் கொள்வீர். (தேவ)

3. இதோ நம் காவலரான ஆண்டவர் வருவார் / அவர் சிரமதில் முடி சூடிய இஸ்ரயேலின் ராயர். / ஒரு கடல் முதல் மறு கடல் வரை / பூமியின் ஒரு கோடி முதல் மறு கோடி வரை / யாவையும் அடக்கி ஆட்சி ஆளுவார். (தேவ)

4. இதோ ஆண்டவர் தோன்றுவார் / அவர் சொல்லோ பொய்யாகாது / அவர் தாமதம் செய்தாலும் எதிர்பாருங்கள். / ஏனெனில் தாமதிக்காமல் வருவார். (தேவ)

5. அன்று ஆட்டுத்தோல்மீது பெய்த மழைபோல் ஆண்டவர் இறங்குவார். / அந்நாளில் நீதியும் சமாதானமும் செழிக்கும், / பூமியாளும் வேந்தர் எல்லோரும் போற்றி சேவிப்பர்/ (தேவ)

6. நமக்கெனப் பாலன் பிறப்பார். / அவரை வல்லபதேவன் என்பர். / தம்முடைய தந்தை தாவீதின் சிம்மாசனம் ஏறி அவர் செங்கோல் செலுத்துவார். / அவரது வல்லபத்தை அவர் தோளிலே காண்பீர். (தேவ)

7. உன்னத கடவுளின் நகரமான பெத்லகேமே, / உன்னிடமிருந்தே இஸ்ரயேலின் அதிபர் எழுந்தருள்வார். / அவர் வருகை நித்திய நாட்களின் தொடக்கத்திலிருந்ததுபோல் ஆகும் / அவரை உலகெல்லாம் போற்றிப் புகழும்./ அவர் வருங்கால் நம் நாட்டில் சமாதானமே நிலைக்கும். (தேவ)

**டிசம்பர் 24 இயேசு நாதரின் பிறப்புக்கு முந்தின நாளில் தொடர்ந்து பாட வேண்டியது.**

8. நாளை பூமியில் பாவம் அழிந்தே தீரும் உலக மீட்பர் நம்மை அரசாளுவார் பாரீர் (தேவ)
9. அருகில் தேவன் வந்துள்ளார். வாரும் ஆராதிப்போமே.

## சுடர் வாசகர் போட்டி 116 சரியான விடைகள்

1. Dilexit nos "அன்பு கூர்ந்தார்"
2. குழந்தை இயேசுவை பார்க்க வந்த கீழ்த்திசை ஞானிகள்
3. திருத்தூதர் புனித அந்திரேயா
4. "கடவுளாகிய ஆண்டவர் இருந்தவரும், இருக்கின்றவரும், வரவிருக்கின்றவரும் எல்லாம் வல்லவரும் அவரே"
5. "ஆண்டவரின் அடிமை என்று கூறியது"
6. அருளாளர் மதலேன் மொரானா
7. கிபி. நான்காம் நூற்றாண்டில்
8. திருத்தந்தை 3ம் கிரகோரி
9. Frati Minori
10. இல்லை
11. திருத்தூதர் அந்திரேயாவின் செபத்தால்
12. புனித செசிலியா
13. கொன்ஸ்தாந்தின் அரசரால்
14. வியட்மாவில் உள்ள சலேசிய சிற்றாலயத்தில்
15. சாவான பாவநிலையில் இறைவனை விரும்பாமல், பாவத்திற்கு மனம் வருந்தாமல் இறப்போர்.

## குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Mrs. Jone Roseline Manonmani, Thanjavur

Mr. George Stephen, Ragavanpettai

Ms. Clara Mary, Bangalore

## சுடர் வாசகர் போட்டி - 117

1. பெண்களின் குரல் எதைக் கட்டியெழுப்புவதில் பெரிய அளவில் பங்காற்ற வேண்டும் என்று திருத்தந்தை கூறுகிறார்?
2. சிறைப் பணியாற்ற முன்வாருங்கள் என்று திருத்தந்தை யாருக்கு அழைப்பு விடுத்தார்?
3. "நீ அழக்கூடாது, அவர் ஒரு புனிதர்......" என்ற வார்த்தை யார் யாரிடம் கூறியது?
4. திருஅவையின் முதல் வேதசாட்சி யார்?
5. புனித பிரான்சிஸ் சவேரியார் கப்ரீனியின் அருளாளர் பட்டம் எப்பொழுது வழங்கப்பட்டது?
6. சிலுவையைப் பிடித்துக் கொண்டே உயிர் துறந்த புனிதர் யார்?
7. அருளாளர் பிலிப்பு ரினால்டி எந்த ஆண்டு சலேசிய தலைவராக தேரந்தெடுக்கப்பட்டார்?
8. புனித பிரான்சிஸ் சவேரியாரின் உடலை எந்த ஆலயத்தில் வைத்துள்ளனர்?
9. உலகை அழகுபடுத்துவது என்றால் என்ன? என்று திருத்தந்தை கூறுகிறார்?
10. புனித வாழ்வு வாழ்ந்தவர்களுக்கென்று சிறப்பிக்கப்படும் நாள் எது?
11. இயேசுவின் பிறப்பின்போது குழந்தைகள் கொல்லப்பட்டன அதேபோல் பழைய ஏற்பாட்டில் யாருடைய பிறப்பின்போது குழந்தைகள் கொள்ளப்பட்டன?
12. ஊருக்கு வெளியே கல்லால் எறிந்து கொல்லப்பட்ட வேதசாட்சி யார்?
13. 24வது வயதில் அகதிகளின் இல்லத்தை கண்காணிக்க அழைக்கப்பட்ட புனிதர் யார்?
14. அன்னை மரியாள் எத்தனையாவது காட்சியில் யாரிடம் நாமே அமல உற்பவம் என்ற பெயரை கூறினார்?
15. 1889ல் புனித ரூவா, அருளாளர் ரினால்டியை எந்த நாட்டிற்கு அனுப்பினார்?


### தீபகச் சுடர்

அன்பு வாசகர்களே!

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 200/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
கைப்பேசி: 9385201453.

பெயர்:.................................
முகவரி:...............................
..........................................
..........................................
..........................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

அன்னை மரியாள் இறைவனின் தாய்

திருக்காட்சி பெருவிழா

ஆண்டவரின் திருமுழுக்கு பெருவிழா

அருளாளர் அலோசியஸ் வரியாரா மற்றும் பொங்கல் திருவிழா

பொதுக்காலம் 2ம் ஞாயிறு

அருளாளர் லவுரா விகூஞா

புனித செபஸ்தியார் திருப்பலி

திருத்தூதர் தூய பவுலின் மனமாற்றம் திருப்பலி

புனித பிரான்சிஸ்கு சலேசியார்

பொதுக்காலம் 3ம் ஞாயிறு மற்றும் இந்திய குடியரசு நாள்

தூய மெர்ஸி அஞ்ஞேசம்மாள் திருவிழா திருப்பலி

தூய தாமஸ் அக்குவினாஸ் திருவிழா

அருளாளர் பொரொனிஸ்லாவ் மார்க்குவிச்

புனித ஜான்போஸ்கோ திருவிழா

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

அருளாளர் தேவசகாயம் - வாழ்வு தரும் பாடம்

புனித தொன்போஸ்கோவின் வாழ்வில் மரியன்னை

திருஅவையின் செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இம்மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை டிசம்பர் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## டிசம்பர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | **ஞா** | **திருவருகைக் காலம் முதல் ஞாயிறு** | I. எரே. 33: 14-16<br>II. 1தெச. 3: 12-4: 2 | லூக். 21: 25-28,34-36 |
| 2 | தி | | எசா. 2: 1-5 | மத். 8: 5-11 |
| 3 | செ | புனித பிரான்சிஸ் சவேரியார் விழா | எரே.1: 4-8 | மத். 16: 15-20 |
| 4 | பு | புனித தமஸ்கு நகர்ப் புனித ஜான் | எசா. 25: 6-10 | மத். 15: 29-37 |
| 5 | வி | அருளாளர் பிலிப்பு ரினால்டி | எசா. 26: 1-6 | மத். 7: 21,24-27 |
| 6 | வெ | புனித நிக்கோலாஸ் | எசா. 29: 17-24 | மத். 9: 27-31 |
| 7 | ச | புனித அம்புரோஸ் | எசா. 30: 19-21,23-26 | மத். 9: 35-10:1,6-8 |
| 8 | **ஞா** | **திருவருகைக் காலம் 2ம் ஞாயிறு** | I. பாரூக். 5: 1-9<br>II. பிலி. 1: 4-6, 8-11 | லூக். 3: 1-6 |
| 9 | **தி** | **புனித கன்னிமரியாவின் அமல உற்பவம் பெருவிழா** | I. தொ.நூ. 3: 9-15,20<br>II. எபே. 1: 3-6,11-12 | லூக். 1: 26-38 |
| 10 | செ | லொரேட்டோவின் அன்னை மரியா | எசா. 40: 1-11 | மத். 18: 12-14 |
| 11 | பு | புனித முதலாம் தமசுஸ் | எசா. 40: 25-31 | மத். 11: 28-30 |
| 12 | வி | குவாதலூப் நகர்ப் புனித கன்னி மரியா | எசா. 41: 13-20 | மத். 11:11-15 |
| 13 | வெ | புனித லூசி | எசா. 48: 17-19 | மத். 11: 10-13 |
| 14 | ச | சிலுவையின் புனித ஜான் | சீஞா. 48: 1-4,9-11 | மத். 17: 10-13 |
| 15 | **ஞா** | **திருவருகைக் காலம் 3ம் ஞாயிறு** | I. செப். 3: 14-17<br>II. பிலி. 4: 4-7 | லூக். 3: 10-18 |
| 16 | தி | | எண். 24: 4-7,15-17 | மத். 21: 23-27 |
| 17 | செ | | தொ.நூ. 49: 1-2,8-10 | மத். 1:1-17 |
| 18 | பு | | எரே. 23: 5-8 | மத். 1: 18-24 |
| 19 | வி | | நீ.த.13: 2-7,24-25 | லூக். 1: 5-25 |
| 20 | வெ | | எசா. 7: 10-14 | லூக். 1: 26-38 |
| 21 | ச | புனித பீட்டர் கனிசியுஸ் | இபா. 2: 8-14, (அ) செப். 3: 14-17 | லூக். 1: 39-45 |
| 22 | **ஞா** | **திருவருகைக் காலம் 4ம் ஞாயிறு** | I. மீக்கா. 5: 2-5<br>II. எபி. 10: 5-10 | லூக். 1: 39-45 |
| 23 | தி | கான்டி நகர்ப் புனித ஜான் | மலா 3: 1-4, 5-6 | லூக். 1: 57-66 |
| 24 | செ | | எசா. 9: 2-4, 6-7 | லூக். 2: 1-14 |
| 25 | **பு** | **கிறிஸ்து பிறப்பு பெருவிழா** | I. எசா. 52: 7-10<br>II. எபி. 1: 1-6 | யோவா. 1: 1-18 |
| 26 | வி | புனித ஸ்தேவான் விழா | தி.ப. 6: 8-10,7: 54-60 | மத். 10: 17-22 |
| 27 | வெ | புனித யோவான் விழா | 1யோவா. 1: 1-4 | யோவா. 20: 2-8 |
| 28 | ச | புனித மாசில்லாக் குழந்தைகள் விழா | 1யோவா. 1: 5-2: 2 | மத். 2: 13-18 |
| 29 | **ஞா** | **இயேசு, மரியா, யோசேப்பின் திருக்குடும்ப விழா** | I. சாமு. 1: 20-22, 24-28<br>II. யோவா. 3: 1-2, 21-24 | லூக். 2: 41-52 |
| 30 | தி | | 1யோவா. 2: 12-17 | லூக். 2: 36-40 |
| 31 | செ | புனித முதலாம் சில்வெஸ்டர் | 1யோவா. 2: 18-21 | யோவா. 1: 1-18 |



TO SHARE THE LIGHT

**தீபகம் – தொன் போஸ்கோ**
**நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்**
வழங்கும்

## கிறிஸ்து பிறப்பு

# நவநாள் செப புத்தகம்

(ஆங்கிலம் மற்றும் தமிழில்)

திருவருகைக்கால தயாரிப்பு புத்தகங்கள், குறுந்தகடுகள்,
குடில் சுரூபங்கள், அலங்காரப் பொருட்கள், நட்சத்திரங்கள்,
மெழுகுவர்த்திகள்
என விழாவிற்கு தேவையான அனைத்து பொருட்களும் கிடைக்கும்.
வாங்கி பயன்பெற அன்புடன் அழைக்கின்றோம்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

# தீபகம்

45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.

+91 9385201453 **Deepagam Don Bosco**

# தீபகம்

தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்

45, லேண்டன்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை-600010



# இல்லம் தேடி இறையரசு

• அன்பு • உண்மை • நீதி • சமத்துவம்

**மக்களுக்கு மாபெரும் நற்செய்தி!!!**

**குழந்தைகள், பெரியவர்கள், இளையோர், முதியோர்**

அனைவரும் வருக! நன்மை பெறுக!!

- குருத்துவ துறவற அழைத்தலை பற்றி அறியவும்
- இளையோருக்கான மன அமைதிக்கு வழிகாட்டவும்
- இளையோருக்கான வேலை வாய்ப்பை அறியவும்
- சிறுபான்மையோருக்கான அரசு நலன்களை அறியவும்
- இளையோருக்கான திருமண தகவல் அறியவும்
- அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான அரசு நலன்களை அறியவும்
- இளையோரின் குடிபோதையை ஒழிக்க ஆலோசனை பெறவும்
- மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு நலன்களை அறியவும்

**"இறையாட்சி உங்கள் நடுவேயே செயல்படுகிறது"** (லூக்கா 17:21)

## அனைவரும் வருக!

நவம்பர் - 2024

இடம் :

**தூய லூர்து அன்னை திருத்தலம்**
**பெரம்பூர், சென்னை**

உங்களை அன்புடன் வரவேற்பவர்கள்

தீபகம், தொன் போஸ்கோ மறைப்பணி மையம்,
பங்குத் தந்தை, பெரம்பூர் மற்றும் சலேசியர்கள்

*தயாரிப்பு* : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
*கணினியேற்றம்* : **கபிரியேல் மேரி** *அட்டைப்பட வடிவமைப்பு* : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
*தயாரிப்பில் மேற்பார்வை* : **சாண்டோ, ஈசாக்** *அச்சிட்டோர்* : **சிகா அச்சகம்,** *கீழ்ப்பாக்கம், சென்னை - 10*